# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 1 (14-04-1998) செவ்வாய்க்கிழமை UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:118


# ஒன்றிணைந்து செயற்பட தமிழ்க்கட்சிகள் அழைப்பு!

## புத்தாண்டுச் செய்தியில் தனித்தனியே விடுத்தன

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

சுதந்திரத்துக்காக நீண்ட போராட்டம் நடத்தும் தமிழ் இனத்தின் எதிர்கால சுபீட்சத்துக்காக சகல தமிழ் அமைப்புக்களும் தமக்கிடையிலான வேறுபாடுகளைக் களைந்து ஓரணியில் திரளவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகிய கட்சிகள் புத்தாண்டை ஒட்டி தனித்தனியாக விடுத்துள்ள செய்திகளில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளன.

ஒட்டுமொத்த நலனின் அடிப்படையில் தமிழ்க்கட்சிகளிடையே ஏற்படும் இணக்கத்துடனான ஒற்றுமையே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஆக்கபூர்வமான திருப்புமுனையை

(7 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மக்கள் வாழ்வில் சமாதானம் மலரட்டும்!

### பலகல்ல புத்தாண்டுச் செய்தி

யாழ்ப்பாணம், ஏப். 14

தமிழ்—சிங்களப் புத்தாண்டை ஒட்டி யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல விடுத்துள்ள செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்-சிங்களபுத்தாண்டை முன்னிட்டு யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலக கட்டளை அதிகாரி என்ற முறையில் யாழ். மக்களுக்கு இச்செய்தியைத்தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ். மக்களாகிய நீங்கள் கடந்த 15 வருட காலமாக அனுபவித்துவந்ததுன்பங்கள் துயரங்கள்எமக்குத்தெரியும். ஆனால் தற்போது அந்த நிலை மாற்றப்பட்டு நீங்கள் சிறந்த வாழ்க்கையை வாழ் வதையிட்டு யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகக் கட்டளை அதிகாரி என்ற வகையில் மிக

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நகர தளபதியின் செய்தி

யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது;-

எனது பொறுப்பின் கீழ் உள்ள பிரிவில் வாழும் சகல மக்களுக்கும் இன்று பிறக்கும் சிங்கள—தமிழ்ப் புத்தாண்டு சுபீட்சத்தையும் அமைதியையும் தர வேண்டும் என்று வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் சிறு மோதல் சம்பவங்கள்

''வெற்று உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் சிறு சிறு மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக 'ரூபவாஹினி' தெரிவித்தது.

மாங்குளத்துக்கு அண்மையில் உள்ள புலுமச்சினாறுக் குளத்தில் ஏற்பட்ட மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும்—

ஒலுமடுப் பகுதியில் இடம்பெற்ற மோதலில்விடுதலைப் புலிகள் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் மேலும்தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)


அனைவருக்கும் உதயனின் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!


## கப்பல் சேவை நேற்று திடீரென நிறுத்தம்!

### பயணிகள் ஏமாற்றம்!

யாழ்ப்பாணம், ஏப். 14

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நேற்று நடைபெறவிருந்த கப்பல் சேவை திடீரென நிறுத்தப்பட்டது.

கப்பலில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறின் காரணமாகவே அந்தச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக பலாலியில் உள்ள பாதுகாப்புத் தலைமையகம் வெளியிட்ட செய்திக்

(7ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவிலில் மோதல்

தென்மராட்சி, ஏப். 14

மந்துவில் பகுதியில் நேற்றுக் காலை 7.00 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் உயிரிழந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் கொடி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்று சோதனைகள் குறைவு

யாழ்ப்பாணம், ஏப். 14

படையினரின் சோதனை நடவடிக்கை நேற்றும் அடுத்து வரும் தினங்களிலும் தீவிரமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும்—

நேற்று யாழ். நகரப் பகுதி தடை நிலையங்களில் சோதனை தீவிரமாக இருக்கவில்லை. சந்தேகத்துக்கு இடமானோர் மட்டுமே சோதனையிடப்பட்டனர்.

படையினர் வீதிகளில் புதிய புதிய இடங்களில் தரித்து நின்று அவ்வப்போது திடீர் சோதனைகளை நடத்தினர்.

நேற்று யாழ். நகரில் புதுவருட விற்பனை அமோகமாக நடைபெற்றது. அசம்பாவித சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை. (உ-139)

# குச்சவெளி முகாம் மீது சனி இரவு தாக்குதல்!

திருகோணமலை, ஏப். 14

திருகோணமலை மாவட்டம் குச்சுவெளியில் உள்ள இராணுவமுகாம்மீது கடந்த சனிக்கிழமை இரவு 8.30மணி முதல் மூன்று மணி நேரம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் கே. எச். செனிவிரத்ன (வயது 25) என்ற இராணுவக் கோப்ரல் உயிரிழந்தார். எஸ். வி. பிரியந்த என்ற சிப்பாய் படுகாயமுற்றார்.

இத் தாக்குதலை அடுத்து அங்கிருந்த படையினர் முகாமைவிட்டு பின்வாங்கியதாகவும்—

முகாமுக்குள் புகுந்த புலிகள் அங்கிருந்த ஆயுதங்களுடன் தப்பிச் சென்றதாகவும் —தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் உயிரிழந்த சிப்பாயின் சடலம் திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டது. காயமுற்ற சிப்பாயும் அங்கு அனுமதிக்கப்பட்டார்.

திருகோணமலை பதில் நீதிவான் எம். கே. செல்வராஜா முன்னிலையில் சிப்பாயின் மரணம் தொடர்பான விசாரணைகள் நடைபெற்றன. (உ)

## "ஒசி" தொலைபேசிக்கும் நகரில் நேற்றுகட்டணம்

புத்தாண்டைஒட்டி ரெலிக்கொம் நிறுவனம் தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு நேற்றும் இன்றும் விசேட சலுகை வழங்கியிருப்பது தெரிந்ததே. அதன்படி இவ்விரு நாள்களிலும் உள்நாட்டுதொலைபேசி அழைப்புகளுக்குக் கட்டணம் அறவிடப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் யாழ். நகரில் உள்ள பல தொலைத்தொடர்பு நிலையங்களில் நேற்று உள்நாட்டு அழைப்புக்களுக்கு வழமைபோன்று கட்டணம் அறவிடப்பட்டதாகப் பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

சில நிறுவனங்களில் பாவனையாளர்களிடம் சேவைக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டது. வேறு சில நிலையங்களில் சேவைக் கட்டணத்துக்கு மேலதிகமாக நிமிடத்துக்கு இவ்வளவு எனக் கட்டணம் அறவிடப்பட்டது.

இதேவேளை —

கட்டணம் அறவிடப்படாது என அறிவிக்கப்பட்டதால் தொலைபேசிப் பாவனை நேற்றுத் திடீரென அதிகரித்தது. இதனால் இங்கிருந்து வெளியூர் இணைப்புக்களைப் பெறுவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன. (ஐ-139-9)

## பாதாள கும்பல்களால் பொலீஸாருக்கு ஆபத்து!

கொழும்பு, ஏப். 14

போதைப் பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள கோடீஸ்வர வர்த்தகர்கள் அவர்களுக்கு எதிராக விசாரணைகளில் ஈடுபட்டுள்ள இரகசியப் பொலீஸாருக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் விதத்தில் பாதாள உலகைச் சேர்ந்தஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாதாள உலகைச் சேர்ந்த 8 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் —பொலீஸ் நிலையங்களில் பணியாற்றும் ஒரு சில அதிகாரிகளின் திறமையின்மை காரணமாக பாதாள உலகைச் சேர்ந்த குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடிவருகிறார்கள் என அது தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## விடுமுறை நாள்

புது வருடத்தை ஒட்டி உதயன் பணியாளர்களுக்குஇன்று விடுமுறை நாளாகும். அதனால் நாளை மட்டும் உதயன் வெளிவரமாட்டான். வியாழக்கிழமை(16-4-98) அவன் வழமை போல உங்கள் கைகளில் தவழ்வான்.

## ஊர்காவலருக்கு ரீ-56 துப்பாக்கி

கொழும்பு, ஏப் 14

எல்லைக் கிராமங்களில் கடமை புரியும் ஊர்காவற் படையினருக்கு ரீ-56 ரகத் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன. அதற்கு முன்பாக அவர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கப்படும். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்

**துர்க்கா மில்ஸ்**

தரமான துர்க்கா சீயாக்காய்ப் பவுடரை
பெற்று பயன் பெறுங்கள்!

**துர்க்கா மில்ஸ்**
மானிப்பாய். (தெல்லிப்பழை)

[54918]

**பொருளியல்**
PAPER CLASS
R. இராஜேஸ்வரன்
ஆரம்பம்:
18 – 04 – 1998
சனி 12 மணி
(சனி, ஞாயிறு)
**D. M. I.**
233, Stanley Road,
Jaffna.

(சி/3443)

## Cricket Academy, Jaffna Indoor Nets JDCA

Inviting cricketers and cricket loving public to donate any books or magazines on cricket to the Library housed at 310, Navalar Road, Jaffna.

T. Jeganathan,
Hony. Secretary.

(C/3442)

சித்திரைப்
புத்தாண்டின்
சிறப்பு வெளியீடு
**சிவா திரையரங்கு**
சிவன் கோயிலடி, யாழ்.
9–00 காலை, 1–00 மதியம்
3–30 மாலை
கமல், பிரபுதேவா
நடிக்கும்
**காதலா காதலா**

(சி/3451)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை வீரவாகு

(இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்)

மீசாலையைப்பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வீரவாகு 11-04-98 இல் சண்டிலிப்பாயில் காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற வேலுப்பிள்ளை குஞ்சுப்பிள்ளையின் அன்பு மகனும், ஜெயந்திராதேவி (கொழும்பு), காலஞ் சென்ற கஜேந்திரன் (ஜேர்மனி), லோகேந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், T. ராஜகோபாலன் (புறூனை), பத்மலோஜினி (ஜேர் மனி), கமலினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாம னாரும், அமரர் பூபாலசிங்கம் (இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்), அமரர் நவரத்தினம் (இளைப் பாறிய பொலீஸ் சார்ஜன்ட்), மகாலிங்கம் (இளைப் பாறிய பொலீஸ் சார்ஜன்ட்), பஞ்சாட்சரம் (ஆசிரி யர்), வாமதேவன் (ஆசிரியர்) ஆகியோரின் சகோதர னும், கார்த்திகா, கோபிகா, கோபாலஸ்காந்தன், துசிந்தன், துர்பிதா, துக்சிபா, வைஸ்ணவன், கஜனி ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொட்டுப்பனை மயானத் தில் 12-04-98 ஞாயிற்றுக்கிழமை தகனஞ் செய்யப்பட் டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
வி. சரஸ்வதி
(மனைவி)

ஆலங்குழாய் வீதி,
சண்டிலிப்பாய் வடக்கு.

(54909)

நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
இன்று புதுவருடத்தில்
14 – 04 – 98
முரளி, குஷ்பு
நடித்த
**வீரத் தாலாட்டு**
ராஜ்கிரன், குஷ்பு
நடித்த
**பொன்னு விளையும் பூமி**
அப்பாஸ் சங்கவி
நடித்த
**இனியெல்லாம் சுகமே**
சிவாஜி, வாணிசிறி
நடித்த
**வசந்த மாளிகை**
காட்சிகள்–9.30, 1.30, 4.30
இரவு 7.30
அனைத்து திரைப்பட ரசிகர்களுக்கும் எமது புத் தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின் றோம்.
மகாத்மா
நிர்வாகத்தினர்.

(சி/3428)

**சேவையில் திருப்தி காண்பதே மகிழ்ச்சியென பலவருட காலமாக யாழ்நகர் மக்களுக்கு பலதரப்பட்ட சேவையை வழங்கி இன்று முன்னணியில் திகழும் சுப்பலோ வீடியோ ஸ்தாபனத்தார் இன்று மற்றும் ஓர் சேவையை ஆரம்பித்துள்ளனர்..**

யாழ்ப்பாணத்தில்
முதன் முதலாக
அறிமுகம்.

15 நிமிட நேரத்தில்!!

**உங்கள் கலர்படச்சுருள்களை நவீன கொம்பியூட்டர் மூலம் கழுவிப்பெற்றுக்கொள்ள இன்று யாழ் நகரில் !!**

# சுப்பலோ
## கலர் படச்சேவை
## SUPERSHOW COLOR LAB

சுப்பலோ– வீடியோ
சுப்பலோ– கலர்படச்சேவை
100A, ஸ்ரான்லி றோட்.
196/5 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

SUPER SHOW - VIDEO,
SUPER SHOW - COLOR LAB
100A, STANLEY ROAD,
196/5, NAVALAR ROAD,
JAFFNA.

(சி/3452)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சண்முகராஜஐயர் லோகேஸ்வரி அம்மா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தி, வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராஜஐயர் — லோகேஸ்வரியம்மா 12-4-1998 ஞாயிற்றுக்கிழமை இரவு 10. 30 மணியள வில் சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மட்டுவில் பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாமிக்குருக்கள் (பொன்னுச்சாமிக்குருக்கள்) —இரத்தினாம்பாள் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும். சண்முகராஜஐயரின் (துரைஐயா, நுணாவில் மத்தி, கந்தசுவாமி (வைரவர்) தேவஸ்தான குரு) அன்பு மனைவியும், சி. இராஜேஸ்வரி, பிரம்மஸ்ரீ கி. சோம சுந்தரக்குருக்கள், பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா, வி. லோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தி. வத்சலாதேவி (சுகாதாரத் திணைக்களம், சாவகச் சேரி), ச. லோகேஸ்வரசர்மா (ரவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரம்மஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் (திருக்கணித நிலையம், மட்டுவில்), சோ. இராஜேஸ்வரி, ச. லலிதாம்பாள், திரு. விஸ்வநாத சர்மா (மக்கள் வங்கி, கொழும்பு) ஆகியோரின் மைத் துனியும் ச. தியானேஸ்வரசர்மாவின் (பங்காளர், ராஜ்வரன் அன் கோ, யாழ்ப்பாணம்) மாமியாரும், தி. பிரதாகினி, தி. மதுராகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 13-4-1998 திங்கள் மாலை 2.00 மணியளவில் நுணாவில் மத்தி, இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்பட் டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்:
நா. சண்முகராஜஐயர்
(கணவர்)

''கருணாநிதி'',
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

(54904)

## ஆறுமுகம் சின்னத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர்)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறு முகம் சின்னத்துரை அவர்கள் 11-04-98 சனிக்கிழமை இரவு 9.00 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி நாகரத்தினம் சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியை, துன்னாலை) அவர்களின் மனைவியும், திருமதி அனுஷா கலா தேவன், விஜயகுமார், திருமதி தயாவதி விஜயகுலேந் திரன், ரவிகுமார், திருமதி அனுராதா சிறீகுமார், மித்திரகுமார் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 12-04-98 அன்று 1.00 மணியளவில் கொழும்பில் நடைபெற்றன.

தகவல்:
சி. ரவிகுமார்

மீசாலை.

(54906)

## ராஜா சொலமன் அருளானந்தம்

(ஒய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் டச்றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜா சொலமன் அருளானந்தம் 13-4-98 அன்று கர்த்தருக் குள் மகிமை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி அருளானந்தம் அவர்களின் அன்புக்கணவரும், ஜோர்ச் ஜெயராஜா (நோர்வே), எட்வேட் தர்மராஜா, அன்ரன் யோகராஜா, திருமதி புனிதவதனி ராஜேந் திரகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், ராஜேந் திரகுமார் (பொபி) (காரியதரிசி Y. M. C. A. பண்டத் தரிப்பு), திருமதி சகுந்தலாதேவி ஜெயராஜா ஆகி யோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனைகள் 14—4|98 இன்று மாலை 3-00 மணிக்கு நடைபெற்று உடுவில், சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராஜேந்திரகுமார்
(மருமகன்)

''சற்குணஸ்தான்''
டச்றோட், உடுவில்.

(54912)

## சின்னத்தம்பி வைத்திலிங்கம்

(ஓய்வுபெற்ற ஊழியர்,
கொமேஷல் வங்கி, யாழ்ப்பாணம்)

ஓட்டகப்புலத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி வைத்தி லிங்கம் 8 - 4 - 98 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இராசம்மாவின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், வைத்தியாம்பிள்ளை, அமிர்த நாயகி ஆகியோரின் மருமகனும், இந்திரன் (பிரான்ஸ்), லலி (பிரான்ஸ்), சோபனா (பிரான்ஸ்), கல்பனா (லண்டன்), தயா, டெனிஸ்ரன் (கொழும்பு) ஆகியவர்களின் பாசமிகு தந்தையும், அன்ரன் (பிரான்ஸ்), அன்பு (லண்டன்), வினி (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்பு மாமனாரும், சிங்கராஜா கனகம்மா, எற்பேட் சின்னம்மா ஆகியோரின் சகோதரனும், நேசையா திரவியம், பாலசிங்கம் ஞானமணி, கருணைநாதன் ஞானசீலி, அமலநாதன் இந்திரா வதி, அரியநாதன் றஞ்சினி ஆகியோரின் மைத்துன ரும், ஸ்ரணி, கமலினி, ஸ்ரிபெனி ஆகியோரின் பேரனு மாவார்.

அன்னாரின் பூதவுடல் 15 - 4 - 98 புதன்கிழமை காலை 10 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.


தகவல்:
மணி
(மனைவி)

440, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 18 — 07 — 1911



இறப்பு: 26 — 04 — 1997

அமரர் முத்தையா சங்கரபாலசூரியர்

திதி: **15 — 04 — 1998** ( சதுர்த்தி )

பாசத்தைப் பொழிந்து அன்புடன் வளர்த்து எம் நெஞ்சங்களில் என்றுமே நீங்காத நினைவுகளுடன் எம்மை விட்டுப் பிரிந்த பாசமுள்ள அப்பாவே! தங்கள் ஆத்மா சாந்தியுறத் தினந் தினம் இறைவனின் பாதங்களில் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமகன்.

காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (54883)

## ஜேர்மன் நிறுவனம் உதவி

திருநெல்வேலி, ஏப். 14

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.இசட்) யாழ்ப்பாணப் பிரதேச புனரமைப்பு நடவடிக்கையின் கீழ் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் தொழில்களை ஆரம்பிக்க விரும்புவோருக்கும், ஏற்கனவேயுள்ள தொழில்களை விரிவுபடுத்த விரும்புவோருக்கும் பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படவுள்ளன.

இதன் ஆரம்ப கட்டமாக இம் மாதம் 28ஆம், 29 ஆம் திகதிகளில் கண்டி வீதியில் உள்ள பஸ்ரியன் உணவக மண்டபத்தில் பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட உள்ளது.

யாழ். செயலக திட்டமிடல் அலுவலர்கள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொள்வர்.

(இ- [illegible])

## புதுவருட கைவிசேஷம்

**வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பின்படி**

நாளை புதன்கிழமை காலை 7.56 முதல் 8.57 வரைக்கும் அல்லது காலை 9.05 முதல் 9.47 வரைக்கும் அல்லது காலை 9.59 முதல் 11.58 வரைக்கும் நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 10.41 முதல் 11.54 வரைக்கும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.19 முதல் 9.40 வரைக்கும் அல்லது காலை 9.52 முதல் 10.45 வரைக்கும் கைவிஷேம் பரிமாறலாம்.

**திருக்கணித பஞ்சாங்கக் கணிப்பின்படி**

நாளை புதன்கிழமை காலை 9.22 முதல் 10.22 வரைக்கும் அல்லது 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.21 முதல் 10.57 வரைக்கும் அல்லது 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.33 முதல் 8.40 வரைக்கும் கைவிசேஷம் பரிமாறலாம்.

**மகாதேவா ஜோதிட கணிப்பின்படி**

இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.05 முதல் 12.29 வரைக்கும் அல்லது நாளை புதன்கிழமை காலை 9.05 முதல் 10.05 வரைக்கும் அல்லது பிற்பகல் 4.05 முதல் 5.05 வரைக்கும் நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 6.05 முதல் 7.05 வரைக்கும் நண்பகல் 1 05 முதல் 1.34 வரைக்கும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.05 முதல் 10.32 வரைக்கும் அல்லது பிற்பகல் 5.05 முதல் 6.05 வரைக்கும் ஆகிய நேரங்களுக்குள் (பழைய நேரம்) கைவிசேஷம் பரிமாறலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வாழ்த்துகின்றோம்

திருமண வாழ்வில் பொன்விழா காணும் பிரபல சமய, சமூகத் தொண்டரும், எமது நிலையத்தின் போஷகருமான

**திரு. கந்தையா இராமநாதன் J. P.**

அவர்தம் துணைவியார்

**திருமதி செல்வராணி இராமநாதன்**

ஆகியோரை பார்புகழ பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் மனோன்மணி,
சனசமூக நிலையத்தினர்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில். (50032)

## நினைவஞ்சலி

**1 ஆம் ஆண்டு** **2ஆம் ஆண்டு**





**அமரர் வல்லிபுரம் சின்னையா** **திருமதி சின்னையா பவளம்**

| | |
|---|---|
| மலர்வு: 13 - 10 - 1910 | மலர்வு: 15 - 01 - 1924 |
| உதிர்வு: 27 - 03 - 1997 | உதிர்வு: 15 - 03 - 1996 |

பிரசித்த நொத்தாரிசும், தமிழ் மொழிபெயர்ப்பாளரும், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உபதலைவரும், சங்கத்தானை வீரகத்தி விநாயகர் தேவஸ்தான முன்னாள் தர்மகர்த்தாவும் ஆகிய அமரர் வல்லிபுரம் சின்னையா அவர்களின் முதலாம் ஆண்டு அமரத்துவ தினத்தையும் அன்னாரின் தர்மபத்தினி சின்னையா பவளம் அவர்களின் இரண்டாம் ஆண்டு அமரத்துவ தினத்தையும் ஒட்டி அவர்களின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆகியோர் இத அஞ்சலியை செலுத்துகின்றனர். அவர்கள் இருவரின் ஆன்ம சாந்தியை வேண்டி எல்லோரும் பிரார்த்திக்கின்றனர். அவர்களின் ஞாபகார்த்தமாக இன்று கைதடி சைவ அனாதைச் சிறுவர் இல்லத்தில் உள்ளோருக்கு மதியபோசனம் வழங்கப் படும்.

அன்பே சிவம் அதுவே தவம்
தகவல்: இ. ஈஸ்வரதாசன் (மருமகன்)

மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி. (சி-3448)

## THE COLLEGE OF HIGHER STUDIES

ANAIPANTHY, JAFFNA.

**SPOKEN ENGLISH**
WITH
**GRAMMAR**

BY:
MR. M, A. HARI
(B. A. Dip. in Eng.)
(யாழ். பிரபல ஆசிரியர்)

புதிய பிரிவு ஆரம்பம்

15 - 04 - 98 புதன் 5 P.M. (பழைய நேரம்)

DIRECTOR
NAVALAR EDUCATION CENTRE
ANAIPANTHY, (54913) JAFFNA.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
திருமதி ஜெயபாரதி நவரத்தினராஜா
அவர்களின் தந்தையார்

**மயில்வாகனம் கணபதிப்பிள்ளை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அலுவலக உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (சி/3449)

## புத்தாண்டில் மின் உலகில் ஒரு புதிய உதயம்

**அதிதீரன்**
மின்சார தொழில் நுட்ப நிலையம்

**ATHETHERAN**
**Technical Centre of Electricity**
(A. T. C. E.)

மின் கம்பி இணைத்தல், மீள முறுக்குதல்

Electrical Wiring & Motor Rewinding

தொடர்புகளுக்கு: இல. 77, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

வாகன மின்னியலாளர், கலட்டி வீதி, கோண்டாவில் தெற்கு, கோண்டாவில்.

(54833)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட பல வர்ணங்களில் மீன்கள் விற்பனைக்கு உண்டு. நண்பகல் 12 மணியிலிருந்து பார்வையிடலாம். தொடர்பு: A. அருளானந்தம்(குட்டி),588/8, நாவலர் வீதி, அரியாலை, (ஸ்ரான்லிக்கல்லூரி முன் ஒழுங்கை).

[54879]

## சோதிடம்

வேலணை சோதுடா ''சிவராசா'' வெளியிட்ட 'சனி மாற்ற பலாபலன்கள்' என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகிறது. 152B, அரசடிறோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். வாங்கிப்படித்து பலனறியுங்கள்.

[54905]

## தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளை தெளிவாகபார்ப்பதற்குபுதியஅன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும் பூஸ்ரர்களைபழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்; வீனஸ் தனபாலசிங்கம் B. Sc Ceylon Dip. In Electronic Engineering London — 284, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை முன்பாக), யாழ்ப்பாணம்.

(சி/3295)

## தேவை

புதிய, பாவித்த பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: 'சாயி' 116, பலாலி வீதி (சுராச்அருகில்), கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[54759]

## யாழ்ப்பாணம்

வானொலியில் நீங்கள் அடிக்கடி கேட்கும் நாடகங்களை எழுதுகின்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். வீரகேசரியில் பிரசுரமான கட்டுரைகள் எங்கும் கிடைக்கும். [54525[

## தவறிவிட்டது

ஆறுமுகம் இராமச்சந்திரனின் பெயரில் உள்ள மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம், லைசன்ஸ், வங்கிப் புத்தகங்கள் அடங்கிய கைப்பை ஒன்று நல்லூர் கோயில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கைலாசபிள்ளையார் வீதியிலுள்ளசொக்கன் கடையில் கொடுத்துதவுமாறு வேண்டுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [54914]

# இந்துமத குருமார் ஒன்றியம் வாழ்த்துகின்றது!

இந்து மத குருமார் ஒன்றியம் சிவாச்சாரியர்களுக்கும், அந்தணர்களுக்கும், குருமாருக்கும் ஆலய அறங்காவலர்களுக்கும், சைவப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் அனைவருக்கும்தனது புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது. சித்திரைப் புத்தாண்டு எமது வாழ்வில் மிக முக்கியமான புனித நாளாகும். பழையனவற்றைக் களைந்து புதியனவற்றுக்கு இடங்கொடுத்து எமது இல்லம், சுற்றுச் சூழல், ஆலயம் ஆகியவற்றைப் புதுப் பொலிவுடன் விளங்கச் செய்வது போன்று எமது சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றையும் இப்புத்தாண்டில் புதுமைபெறச் செய்வோமாக! புதிய தெம்பும் புத்துணர்ச்சியும் மேலோங்கி புது வருட காரியங்கள் அனைத்தும் வெற்றியுடன் சிறப்புற்றோங்குக!

ஆலயங்களில் நித்திய, நைமித்திகங்கள் ஒழுங்காக நிறைவேறவும், நாட்டில் சாந்தியும் சுபீட்சமும் நிறைந்து மக்கள் வாழ்வு மகிழ்ச்சிகரமானதாக விளங்கவும், எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக!

'சர்வே ஜனா: சுகினோ பவந்து!

– இந்துமத குருமார் ஒன்றியம்

யாழ்ப்பாணம். (54881)

# 9 ஆம் ஆண்டு நீங்காத நினைவு



## அமரர் S. T. சந்திரகுமார்

(கிராம சேவையாளர், கரம்பன் மேற்கு.)

அழிப்பு: 14 — 04 -- 1989

ஒன்பது ஆண்டுகள் முடிந்துவிட்டன. உமது நினைவுகள் ஒருபோதும் எங்கள் மனதை விட்டு அகலாது. உமது நினைவாக நீர் அன்பாக வளர்த்த டாஸோ தான் எங்களோடு இருக்கின்றார்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அம்மா செ. பாக்கியம்,
அக்கா S. T. சகுந்தலாதேவி.


40/05, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (54869)

குருநகர்

# புனித யாகப்பர் ஆலய

நிதி உதவிக்கான

## மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி-1998



யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடனும் குருநகர் பாடும் மீன் கழக அனுசரணையுடனும் புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மண்டைதீவில் மறைந்த 31 குருநகர் மீனவர்களின் 12 ஆவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்த ''தூய ஒளி'' சுற்றுக்கிண்ணத்திற்கான 9 பேர் கொண்ட விலக்கல் முறையிலானஉதைபந்தாட்டப்போட்டி. இப்போட்டியில் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் இணைந்த கழகங்கள் கலந்து கொள்ளலாம். ஒரு கழகம் எத்தனை அணிகளாகவும் கலந்து கொள்ளலாம். ஓர் அணிக்கு விண்ணப்பக்கட்டணம் ரூபா 100. விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி 18 - 04 - 1998 போட்டிக்கான அட்டவணை தயாரித்தல்19-04-1998 இல். இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிகளுக்கு ''தூய ஒளி'' சுற்றுக்கிண்ணமும் பண முடிச்சும் வழங்கப்படும். காலணிகள் கவனிக்கப்படமாட்டாது, போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் போட்டிக் குழுச் செயலாளர், அ. பெனடிக்ற்ராதா, இல: 16 ஐஸ்பிளான்ற் வீதி, குருநகர் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம். போட்டிகள் யாவும் குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

நன்றி.

செயலாளர்
போட்டிக் குழு

புனித சூசையப்பர் விளையாட்டு கழகம். (54907)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(15-04-98)



தோற்றம்: 08-05-1920 மறைவு: 16-03-1998

திருமதி

## பாக்கியம் செல்லத்துரை

எம்மை எல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் இவ்வேளையில் அமரரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

103/1, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (54911)

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

J. S. B COMMUNICATION CENTRE

உள்நாட்டு, வெளிநாட்டு தொலை பேசி அழைப்புகளை
வெகு இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையம்

J. S. B தொலைத் தொடர்பு நிலையம்

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(BDND கல்வி நிலையத்திற்கு அருகில்)

TELEPHONE NO 2140
2041
2042

(5882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் நனையும்

## 31 ஆம் நாள் நினைவுகள்



பிறப்பு: 18 — 11 — 1959

இறப்பு: 15 — 03 — 1998

## மனவல் கிறிஸ்ரியன்

(டண்சன்)

இல்லத்தின் தலைவனே!
இதயத்தின் ஒளிச்சுடரே!
உண்மையின் உருவே
உயிரான எம் ஆலயமே!
என் உயிர் கணவனே
கருணையின் தந்தையே!
என் அருமை மகனே
பாசத்தின் சகோதரனே!
பண்பான மருமகனே
எம்மைவிட்டுப் பிரிந்து
மாத மொன்று ஆனதே!

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

13/1, தண்ணீர்த்தாங்கி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(54910)

# 6-ம் மாத நினைவலைகள்



அமரர் கந்தையா குலசேகரம்பிள்ளை

(சமாதான நீதிவான்)

பிறப்பு: 1926—08—30

இறப்பு: 1997—10—14

திருமகனே எங்கள் தெய்வமே
பெருமகனே எங்கள் பேராளனே
வாரி வழங்கும் எங்கள் வள்ளலே
வருடப்பிறப்பன்று வந்திடுவோம்
கைவிசேடம் வழங்கி வாழ்த்திடுவீர்
வருசமும் வந்தது; நாங்களும் வந்தோம்.
வள்ளல் நின்ற வாசலிலே
வள்ளல் இல்லை! வாசல் கண்டோம்
வாய்புதைத்து விம்முகின்றோம்.

- குடும்பத்தினர்

''பழமுதிர்சோலை''
எழுதுமட்டுவாள்.

(54870)

# வெகுதானிய வருடப்பிறப்பு

வெகுதானிய வருடம் நேற்றிரவு பிறந்திருக்கிறது. புது வருடம் பிறக்கும் வேளையில் ஆலயங்களில் விசேட அபிஷேகம், பூசைகள் நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

வாக்கிய பஞ்சாங்கத்தின் கணிப்பின் பிரகாரம் புது வருடம் நேற்றுப் பின்னிரவு 2 மணி 51 நிமிடத்தில் பிறந்தது.

அதன் பிரகாரம் நேற்றிரவு 10 51 மணி முதல் இன்று அதிகாலை 6.51 வரைவிஷு புண்ணிய காலமாகும்.

இந்தப்புண்ணிய காலத்தில் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து புனித நீராடி வெண்ணிற கறுப்புக் கரை அமைந்த புத்தாடை அணிந்து தெய்வ வழிபாடும் பெற்றோர் மற்றும் பெரியவர்களை வணங்க வேண்டும்.

திருக்கணித பஞ்சாங்கக் கணிப்பின் பிரகாரம் புது வருடம் இன்று அதிகாலை 5-34 மணிக்குப் பிறந்தது.

நேற்றுப் பின்னிரவு 1-34 மணி தொடக்கம் இன்று முற்பகல் 9-34 வரை மேட சங்கிரமண புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து புனித நீராடி வெண்ணிற ஆடை அணிந்து தெய்வ வழிபாடு பெற்றோர் மற்றும் பெரியவர்களை வணங்க வேண்டும்

(வருடப் பிறப்புக் கருமம் குறித்து ஞாயிற்றுக்கிழமை உதயனில் மிக விவரமாக வெளிவந்தது)

(அ-7)

# இசைவிழாவில் இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஏப். 14

நல்லூர் இளங்கலைஞர் மன்ற இசைவிழாவின் நான்காம், ஐந்தாம் நாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் மாலை 3மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

இன்றைய நிகழ்வுகளாக ஷர்மிளா புவனேசனின் புல்லாங்குழலிசையும், ரி. கருணாகரனின் பாட்டும், பொன்ஸ்ரீ வாமதேவனின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நாளைய நிகழ்வுகளாக ஆனந்தி சண்முகநாதனின் கிற்றாறில் கர்நாடக இசையும், பரமேஸ்வரி கணேசனின் பாட்டும். ஸ்ரீசக்தி நடனாலயம் வழங்கும் பரதநாட்டியமும் இடம்பெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

(இ-8-111)

# தேர்த் திருவிழா

கொழும்புத்துறை, ஏப் 14

புதுவருடப்பிறப்பு நன்னாளில் இன்று செவ்வாய்க்கிழமை காலை சில ஆலயங்களில் தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற உள்ளன.

யாழ். அத்தியடி அருள்மிகு ஸ்ரீபிள்ளையார் கோயில், மானிப்பாய் அருள்மிகு ஸ்ரீ மருதடி விநாயகர் ஆலயம், பண்டாரக்குளம் மருதவளவு அருள்மிகு ஸ்ரீ விநாயகர் கோயில் ஆகியவற்றில் இன்று காலை வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் பாலிப்பர்.


(இ-30)

அறிவித்தல்



மொனிசன்ஸ் (வலி நிவாரணி) பாம்
MONISONS PAIN BALM
இந்தியாவிலிருந்து உங்களுக்காகவே விசேடமாக தருவிக்கப்படுகிறது
• வீக்கம் • சுளுக்கு
• கழுத்துபிடிப்பு • தலைவலி
• மூட்டுவலி • தசைவலி
• முதுகு வலி போன்ற
வலி / நோவுகளுக்கும் நொடிப்பொழுதில் நிவாரணம் தரும் மொனிசன்ஸ் பாம்
வடக்கு - கிழக்கு பகுதிகளிலும் கிடைக்கும்
எஸ். எஸ். இம்போட அன்ட எக்ஸ்போட்
A-G-3 Sanchi Arachchi Garden, Colombo 12
☎ 449371, 324615, 335203, 078 43549
பெக்ஸ் 335673 E-mail: ssie@itmin.com
(மருதானை டெக்னிகல் கொலேஜ ரவுண்டபவுட அருகாமையில்)
பரிசுப் போட்டி வருட இறுதியில் பரிசு மழை காத்திருக்கின்றது
உங்கள பெயர் விலாசத்துடன மொனிசனஸ் பாம பெட்டிகள் அல்லது உறைகள் (பெரியது 2 அலலது சிறியது 3) அனுப்பி போட்டியில கலநது கொளளுங்கள் அதிக பெட்டிகளை அல்லது உறைகளை அனுபபுகின்றவாகளுககு விஷேட பரிசில்கள் உணடு
(சி/3379)

# 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26 — 04 — 1926

மறைவு: 08 — 04 — 1985

அமரர்

## சின்னையா மார்க்கண்டு

திதி: 14 — 04 — 1998


தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
சகோதரன், சகோதரிகள்,
மருமக்கள், மைத்துனர்,
மைத்துனிமார்.

பிரதான வீதி,
சங்கானை கிழக்கு, சங்கானை.

(54872)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 05 — 1937

மறைவு: 14 — 04 — 1994

## அமரர் மாணிக்கம்கந்தசாமி

(முத்துலிங்கம்)

[ஆசிரியர், யா/உயரப்புலம் மெ. மி. த. க. வித்தியாலயம்]

திதி: 30-04-98

கதைகள் பல கூறி
களிப்புற்ற வேளைதனில்
கண்மூடி மறைவதற்குள்
காலன் உமைக் கவர்ந்ததேனோ?
உங்கள் நினைவில் வாழும்:

மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளை.

'திருவேரகம்'.
சுதுமலை தெற்கு.
மானிப்பாய்.

(54865

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இந்து இளைஞர் பேரவையின்
# 12 ஆவது பேராளர் அவைக் கூட்டமும் தேசிய இந்து இளைஞர் மாநாடும்

மேற்படி மாநாடும் பேராளர் அவைக் கூட்டமும் 18 - 04 - 98, 19 - 04 - 98 ஆகிய இரு தினங்களும் மு. ப. 9-00 மணி தொடக்கம் பி. ப. 7-00 மணி வரையும் திருகோணமலை இராமக்கிருஷ்ண சங்க ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இந்து இளைஞர் மன்றங்கள் இதை அறிவித்தலாகக் கொண்டு தங்கள் மன்றத்தின் இரு பிரதிநிதிகளை அறிமுகக் கடிதத்துடன் கலந்து கொள்ளச் செய்யும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

''சிவஞானச்செல்வர்''
(செ. சிவபாதசுந்தரம்)
தலைமைச் செயலாளர்
இலங்கை இந்து இளைஞர் பேரவை.

244, பிரதான வீதி,
திருகோணமலை.

(சி-3444)

## நேர்முகப் பரீட்சை

திருநெல்வேலி, ஏப் 14

யாழ். சுகாதார பிராந்தியத்தில் பணியாற்றி வரும் சுகாதார தொண்டர்களிலிருந்து அமைய சுகாதார தொழிலாளர் பதவிக்கு தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 17 ஆம் 18 ஆம் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனையில் நடைபெற உள்ளது.

யாழ். பிராந்தியத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளிலும் சுமார் 600 பேர் வரை எவ்வித வேதனமும் இன்றி சுகாதார தொண்டர்களாக சேவையாற்றி வருகின்றனர்.

சுகாதார தொழிலாளர் பதவியை பெறுவதில் இவர்களுக்கும் சந்தர்ப்பமளிக்கப் படுவதற்காகவே நேர்முகப் பரீட்சை நடத்தப்படுகிறது.

(இ-135)

## மாதா, பிதா,...

(11 ஆம் பக்கத் தொடர்)

எம் நன்றிக்குரியவரை நினைந்து அவர்களை மதித்து வணங்க முற்படுங்கள். விழாக்கள் அர்த்தமுள்ளவையாகக் கருதப்படுகிற போதே நம் சந்ததி அதன் பெருமையை உணர்ந்து பேணும். இதைவிடுத்து அர்த்தமற்ற வாழ்வை மேற்கொள்வோமானால் என்ன பயன்? எம் இனிய சந்ததியின் நல்வாழ்வுக்காக விழாக்களின் அர்த்தங்களைக் காப்போமாக.

★


# HOTEL VEGELANDS
## (ஹொட்டேல் வெயிலன்ட்)

கொழும்பு மாநகர் பம்பலப்பிட்டியில் ஆலயங்கள், பாடசாலைகள் பொதுச்சந்தை வைத்தியசாலைகள் நிரம்பிய தரமான சூழலில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் தகுதியான சகல வசதிகள் நிரம்பிய அறைகள் நாளாந்த, மாதாந்த வாடகைக்குதரப்படும். தொலைபேசி, வாகன வசதிகள் உண்டு.

11, Upatisa Road,
Bambalapitiya, Colombo - 04

11, உபதிஸ்ஸ றோட்,
பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.

தொலைபேசி:- 582727, 508876, 592827

(சி/3410)

நமதன்பர்கள், நண்பர்கள்,
நல்லாதரவாளர்கள் அனைவரும்
நற்பயன்களெல்லாம் பெற்று
நலத்தோடும் வளத்தோடும் வாழ
நமது இதயம் கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# சோபனா ஜுவல்லர்ஸ்

உங்களது அனைத்து நகைத்
தெரிவுகளுக்கும் உகந்த இடம்

## சோபனா

இல. 116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 3447)

# BAGAWAN WORLD LINK COMMUNICATION

## பகவான் உலகத் தொலைத் தொடர்புச் சேவை

342, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(ஹோட்டல் றொலக்ஸுக்கு அருகில்)

புதுவருட நற்செய்தி: 13 ஆம், 14 ஆம் திகதிகளில்
உள்நாட்டுத் தொலைபேசிக் கட்டணம் — நிமிடத்துக்கு ரூபா 3.00
வெளிநாட்டுத் தொலைபேசி --மிக மிகக் குறைந்த கட்டணம்.
உங்களுக்கு வரும் உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைபேசிச் செய்திகள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

தொலைபேசி எண்: 2507, — 2513
2513

(54890)

# புதுவருட நல்வாழ்த்துக்கள்

## ★ வணக்கம் ★

# பயணிகளுக்கு



# HAPPY JOURNEY

# LION AIR

**Agent: S. Manoharan**
37, KASTHURIYAR ROAD,
JAFFNA.

Telephone No. 021 – 2028

(சி-3409)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புத்தாண்டும் இயற்கையும்

மற்றொரு புதிய ஆண்டு புலர்ந்திருக்கிறது. புதியன எப்போதும் மனமலர்ச்சியைத் தருவன.

சித்திரைப் புத்தாண்டு இயற்கையின் மலர்ச்சிக் காலம்; இளமைக் காலம்; வசந்த காலம் என்றும் சொல்லப்படுவது உண்டு.

மரங்கள் மலர்ப்போர்வை அணிந்து எழில் கூட்டும். தென்றல் மெல்லெனவந்து தழுவி இதம் சேர்க்கும். குயிலினங்கள் அதிகாலைப் பொழுதிலிருந்தே கானம் இசைத்துக் களிப்பூட்டும். இயற்கை பூரிக்கும் காலத்தில் அதன் இளமைக் காலம் கண்டு மனிதனும் மனம் மகிழ்வது இயல்பு. அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் பாங்கேபுத்தாண்டு காணும் வழக்கமாயிற்று.

ஆனால் காலம் கழிந்து செல்லச் செல்ல இயற்கையில் பலமாற்றங்கள் ஏற்பட்டன; ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பாதகமான மாற்றங்களுக்கு மனிதனின் ஒவ்வாத செய்கைகளும் காரணங்கள் என்பது கசப்பான உண்மை! தென்றல் தவழ்ந்து இன்ப இதம் தரவேண்டிய வேளையில் அனற் காற்றுவீசி மக்களை அக்கினியாகப் பொசுக்குகிறதே!

இயற்கை இளமை குன்றாது மனிதனுக்குரியவளங்களை வாரி வழங்கும் — அள்ளிக் கொடுக்கும் — என்ற கருத்து மாறிவிட்டது. மனிதனைப்போலவே அதற்கும் பிணியும் மூப்பும் வரும் என்று கண்டறியப்படுகிறது.

தனது சொந்த நலன் கருதி, இயற்கையை மனிதன் அளவுக்கு அதிகமாக, வரம்பின்றித் தீண்டி நாசப்படுத்தியதன் விளைவும் இயற்கைக்குப் பிணி உண்டாக, காலப் பிறழ்வுகள் உருவாகக் காரணம்.

மனிதன் பெரிதும் மாறிவிட்டான்;வெகு துரிதமாக மாறிக்கொண்டிருக்கிறான். மாற்றம், வளர்ச்சி, முன்னேற்றம் என்ற பெயரில் அவசரப்பட்டு, அவாவுற்று விளைவை— பாதிப்பை— மனதிற்கொள்ளாமல், எவ்வித கட்டுப்பாடோ மனக்கூச்சமோ இன்றி தான் நினைத்ததை, விரும்பியதைச் செய்கின்றான்.

அது தனக்குள்ள உரிமையென்றும் தவறாகஎண்ணிக்கொள்கின்றான். விஞ்ஞான முன்னேற்றம் கண்ட வளர்ச்சி அடைந்த நாடுகள் இயற்கை தமக்கு மட்டுமே சொந்தம் என்ற இறுமாப்புடன் செயற்படும் போக்கு வேறு.

இந்த நிலை மாறாவிடில் இயற்கைக்கு மேலும்பாதிப்புகள் வரும்—அது பிணியுறும்— காலநிலைகள் மனிதனுக்குப் பாதகமாக மாறும்.

இந்த விவகாரம் மனித இனத்துக்கே— சர்வதேசங்களுக்குமே— ஒரு சோதனையாக மாறிவருகின்றது.

இயற்கையும் காலநிலையும் மாறிக்கொண்டிருக்கையில் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் உடனடியாக இல்லாவிடினும், காலஓட்டத்திலேனும் தேவைப்படலாம்.

மனிதன் ஏனைய துறைகளில் செய்யும் மாற்றங்களால் உண்டாகும் பாதிப்பு, அவனது கலாசாரக் கால அட்டவணைகளையும் மாற்றுவதற்குக் காரணியாகலாம்; கவனம்! வினை விதைத்தால்அதனைத்தானே அறுக்க நேரிடும்; இல்லையா....?!

# தமிழர் கூட்டணியின் புத்தாண்டுச் செய்தி

புத்தாண்டை ஒட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட அமைப்பினர் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நிம்மதிக்கும் விடுதலைக்கும் போராடிக்கொண்டிருக்கும் தமிழினம் இப் புத்தாண்டிலாவது தனது எதிர்பார்ப்புகளைப் பெற்று புதிய வாழ்வுகாணவேண்டும். எமது மக்களின் எதிர்பார்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் ஜனநாயக வழிமுறைச் செயற்பாடுகளுடன் இணைந்துகொள்ள மன உறுதியும், தூய்மையும் கொண்ட தலைமைத்துவம் அவசியம், அத்தகைய மன உறுதி, தூய்மை கொண்ட வாழ்வுகாணவும், மக்கள் நிம்மதி ஊடான சுதந்திரமான வாழ்வு வாழ்வதற்காகவும் இறைவனை அனைவரும் பிரார்த்திப்போம்.

மாற்று இனஅரசியல் எதேச்சாதிகாரங்கள், நமது அரசியற்கள உட்பகை அழிவுகள் பதவிவேட்கையின் குதிரை ஓட்டங்கள், தமிழினத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ள சமுதாய ஒழுக்கச் சீர்குலைவுச் சிதைவுகள், போர் எச்சங்களின் சீரழிவுகள் ஆகிய பல்புறத் தாக்கங்களினின்றும் விடுதலை பெற புதிய புத்தாண்டை வணங்கி வரவேற்போம். —என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# ஒட்டுமொத்த நலன்கருதி ஒன்றுபட்டு நிற்போம்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம். ஏப். 14

தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நலன்களைப் பேண வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்க்கட்சிகளும், இயக்கங்களும் தமக்கிடையில் உள்ள குறுகிய சிந்தனைகளை விடுத்து ஓர் ஒருமைப்பாட்டிற்கு வரவேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் செயலாளர் நாயகம் கே. சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டால் அதுவே இனப் பிரச்சினையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும். இவ்வாறு இணைவதன் மூலமே அரசையும், எதிர்க்கட்சியையும் நாம் நிர்ப்பந்திக்க முடியும். மலரப் போகும் புத்தாண்டில் அனைவரும் ஒன்றுபட்டு எமது உரிமைகளை வென்றெடுக்கவும், சமாதானத்தை உருவாக்கவும் அனைவரினது கரங்களும் உயரட்டும் என வாழ்த்துகின்றேன்— என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-9)

# ஒரே குடையின் கீழ் அணி திரள்வோம்!

## ஈ.பி.டி.பி. புத்தாண்டு செய்தி

யாழ்ப்பாணம், ஏப். 14

தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அழுத்தங்களையும், யுத்த சூழலையும் விலக்குவதற்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் அணி திரண்டு ஒற்றுமையாகக் குரல் கொடுக்கவேண்டும்.

ஈ. பி. டி. பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே. ஜெகன் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்.

பல சோகங்களையும் மனச் சுமைகளையும் தாங்கி, துயரத்தின் விளிம்பில் நிற்கும் தமிழ் மக்கள் மலர்ந்திருக்கும் இந்தப் புத்தாண்டில் சாந்தியும், சமாதானமும், சுபீட்சமும் பெற்று மகிழ்வோடு வாழ வாழ்த்துவதோடு அனைத்துத் தரப்பினரும் இதற்குத் துணை புரியவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ-9)

### ஒன்றிணைந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்படுத்தமுடியும்.

இவ்வாறு இணைவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசு மீதும் எதிர்க்கட்சி மீதும் அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும் — என்று தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

(கட்சிகளின் சார்பில் தனித் தனியாக விடுக்கப்பட்ட புத்தாண்டுச் செய்திகளின் முழு விவரமும் 7 ஆம் பக்கத்தில்) (ஐ-9)

### உதயவாக்கு

அன்பில் நிலைத்திருப்பவன் அச்சத்தை அறியான்.

— ஓர் அறிஞர்

### நாளை

சித்திரை 02

புதன்கிழமை

திதி: திருதியை முற்பகல் 9.01 வரை

நட்சத்திரம்: அனுஷம் பின் இரவு: 3.06 வரை

சுபநேரம்: 4.34-6.04

ராகு காலம்: 12.04-1.34

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

மகிழ்ச்சி அடைகின்றேன.

மலர்ந்துள்ள புத்தாண்டில் நீங்களும், நாங்களும் எதிர்பார்க்கும் சமாதானத்தை உருவாக்க பாதுகாப்புப் படையினர் செயற்படுகிறார்கள் என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

மலர்ந்துள்ள புத்தாண்டு யாழ். மக்கள் அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும் நிறைந்த வருடமாக மாறவேண்டும் என இதய பூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன். (ஐ)

### மந்துவிலில்..

(முதலாம் பக்கத் தொடர்)

காமம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. சடலம் அடையாளம் காண்பதற்காக பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. (ஐ-117-15-139)

# பிளவுண்டு நிற்கும் வரை இன விடுதலை கிட்டாது

## 'புளொட்' தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் தமிழ் அமைப்புக்களிடையேயும் கட்சிகளிடையேயும் காணப்படுகின்ற பிளவுகளாலும் பிரிவுகளாலும் வென்றெடுக்கப்படமுடியாமல் பின்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நிலை தொடரும் வரை தமிழ் இனத்துக்கு விடுதலை என்பது கிடையாது. எனவே எமது விடுதலையை வென்றெடுக்க பிளவுபட்டுள்ள கட்சிகளும் அமைப்புகளும் ஒன்றுபடவேண்டும்.

''புளொட்'' அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மக்களின் அடிப்படை அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக்காண நாம் அனைவரும் ஐக்கியமாகப்போராட வேண்டிய காலம் இது.

''ஒன்றாய் இன்றும் நாம் இல்லையேல் விடுதலை என்றும் எமக்கில்லை'' என்ற கூற்றுக்கமைய நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் உரிமையுடனும், பாதுகாப்புடனும் வாழக் குரல் கொடுப்போம்- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-9)

### சமய நிகழ்வில்

யாழ்ப்பாணம், ஏப். 14

கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தில் தேர்த் திருவிழா இன்று காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசையை அடுத்து நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்குத் தீர்த்தத் திருவிழா நடைபெற்று பிற்பகல் 4 மணிக்கு கொடியிறக்கம் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தக்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வைரவசாந்தியும்தொடர்ந்து அன்னதானமும் இடம் பெறும். (ஐ-9)

★ ★ ★

வண் - மேற்கு காட்டுத் துறை அருள்மிகு பகவதி அம்மன் கோயில் அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது.

தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகி விசேட பூசையை தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருதல் இடம்பெறும்.

கடைசி நாளாகிய 22 ஆம் திகதி புதன்கிழமை பகல் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், மாலை சிங்க வாகனத்தில் வீதி உலாவும் நடைபெறும். (இ)

### கப்பல் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்)

குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக வருந்துவதாகவும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பயண ஏற்பாடுகளுடன் நேற்றுக் காலை யாழ். ரயில் நிலையப் பகுதிக்கு வந்த பயணிகள் கப்பல் சேவை நடைபெறாது எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மீண்டும் கப்பல் சேவை எப்போது நடைபெறும் என்பது குறித்து எதுவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. (ஐ-7-9)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்.
30அடிஅகல வெண்திரையில்
14-04-98 செவ்வாய்
M.G.R. - ஜெயலலிதா நடித்த
குடியிருந்த கோயில்
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )
ரசிகர்களுக்கு எமது புதுவருட வாழ்த்துக்கள்!
(54916)

யாழ்.
றீகல் வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
புதுவருடத்தை முன்னிட்டு
காலை — 8-30 மணிக்கு
Operation Delta Force
தாக்குதல் சித்திரம் Part - I
பகல் 11 மணிக்கு
ராஜ்கிரண் - குஷ்பூ
பொன்னு விளையிற பூமி
பகல் 2-30 மணிக்கு
கமல் - மனிஷா
இந்தியன்
(54919)

ஸ்ரீ செல்வா திரையரங்கு
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
ரசிகர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
14-4-98 புதுவருடத்தை முன்னிட்டு
முரளி, ராஜ்கிரண், குஷ்பு, லட்சுமி நடிக்கும்
வீரத்தாலாட்டு
10-30, 2-30 மணிக்கு
(பழைய நேரம்)
(54864)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
புதுவருடத்தை முன்னிட்டு எமது புதிய வெளியீடு
இன்று முதல்
கமலஹாசன், பிரபுதேவா, சங்கரி, ரம்பா நடித்த
காதலா காதலா
நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 - 212223
(54347)

புத்தாண்டு வாழ்த்துக்கள்!
எமது புதிய வெளியீடு!
இசைத்தென்றல் VOL 34
புதிய போஸ்டர்கள் விற்பனைக்குண்டு.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
[சி/3450]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் நாளை காலை 9 மணிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக இருக்கின்றது.

தினசரி காலை 9.00 மணி தொடக்கம், ஆறுமணி நேரம் பயிற்சிகள் நடைபெறும் என்றும் —

ஒவ்வொரு பாடசாலையும் 01–01–1979 அல்லது அதற்குப் பிறகு பிறந்த ஐந்து கிரிக்கெட் வீரர்களை தெரிவுக்கு அனுப்ப முடியும் என்றும் —

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது. (உ)

நகர..

(முதலாம் பக்கத் தொடர்)

எதிர் காலத்தில் நாம் அமைதியுடனும் ஐக்கியத்துடனும் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்கும் விதத்தில் ஒருவரோடு மற்றவர் கை கோர்த்து ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று எனது பிரிவில் வாழும் மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எங்கள் எல்லோருடைய வாழ்க்கையும் தடங்கலின்றி இனிதே நடைபெற வேண்டும் என்று கடவுளர்களைப் பிரார்த்திக்கின்றேன்.

எங்கள் வாழ்க்கையை இன்றுள்ளதுபோலவே தொடர்ந்தும் நடத்தப் போகிறோமா, அழிவுகளையும் துன்பத்தையும் தரும் பாதையிலேயே நடக்கப் போகின்றோமா அல்லது அமைதியான மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு மாறப் போகின்றோமா என்பது குறித்து நாம் எல்லோரும் முடிவு செய்ய வேண்டிய வேளை இதுவாகும்.

அமைதியும், ஐக்கியமும், நல்வாழ்வும் தாமதம் இன்றிக் கிடைக்க எல்லோரும் ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

எனது பிரிவில் உள்ள சகலருக்கும் சகல சோபனங்களும் கிடைக்க இதயபூர்வமான வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுங்கள்—என்று தெரிவித்துள்ளார். (ஐ–அ)


**புதுவருடத்தில் மங்களம் பொங்க, மனம் நிறைந்த வாழ்வு மலர**

**எமது வாழ்த்துக்கள்!**

மனத்திருப்தியுடன் புடைவைத் தினுசுகளை தெரிவு செய்வதற்கு

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**
77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**மகளிர் கோட்டம்**
81, பெரியகடை, யாழ்ப்பாணம்

**புத்தாண்டு தொடக்கம் புதுவாழ்வு, புத்தூக்கம், புத்துணர்ச்சி பிறக்க**

**எமது வாழ்த்துக்கள்**

**ஜெசிபா ஏஜென்சி**

**JEISHEBA AGENCY**

**(Genaral Hardware Merchant, Paint & S - Lone Pipes)**

132, Stanley Road,
Jaffna.

132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**மங்களகரமான புத்தாண்டு வாழ்த்துக்கள்**

**GNANAMS LINK INTERNATIONAL**

GNANAMS LINK INTERNATIONAL

**ஞானம்ஸ் றேட்ஸ்**
150, 152 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 - 2052

**ஞானம்ஸ் றேட்ஸ்**
கிளை நிறுவனம்
251, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 2666

**இரவு பகல் தொலைபேசிச் சேவை**

*உங்கள் உள்ளூர் வெளியூருள்ள உறவினர் நண்பர்களுடன் தாராளமாக உரையாடுவதற்கு எமது ஸ்தாபனத்தில் சகல வசதிகளையும் செய்து தருகின்றோம் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.*




I) இரவு தங்கிநின்று வெளியூர் உள்ளூரிலுள்ள உங்கள் உறவினர் நண்பர்களுடன் தொடர்பைஏற்படுத்தி உடனுக்குடன் தொடர்பு கொள்ளும் வசதி.

II) தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துடன் இணைந்த [FAX] வசதிகள்

III) பல்வேறு இடங்களுக்குமான தொலைபேசி வசதிகள்.

IV) போட்டோ பிரதி சேவையுடன் இன்னும் பலவற்றை இத்துடன் இணைத்துள்ளோம்.

V) இத்துடன் உங்களுக்கு வரும் (FAX) செய்திகளை உங்கள் இல்லத்திற்கு உடனுக்குடன் அறியத் தருகின்றோம்

VI) உங்கள் உள்ளூர் வெளியூரிலுள்ள உற்றார், உறவினர்களின் செய்திகளை அங்கிருந்து அவர்கள் கூறும்போதோ OR இங்கிருந்து நீங்கள் கூறும்போதோ அவர்களுக்கோ OR உங்களுக்கோ முடிந்த அளவில் உடனுக்குடன் அறிவிப்போம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்க என்றும் வளமுடன்!**

**- நிர்வாகி**

இதயம் கனிந்த எங்களது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக.

என்றும் அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு

**சிறி நதியா நகைமாடம்**

**SREE NATHIYA JEWELLERS**

[மீண்டும் மீண்டும் செல்லத்தூண்டும் காண்போர் மயங்கும் காட்சிக்கூடம்]

**2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

இணை நிறுவனங்கள்:-

**சிறி நதியா நகைமாடம்**
56, கஸ்தூ ாரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி ரூபா நகைமாடம்**
113, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/3445]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக் ேகசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14 – 04 – 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன்
## சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர்

# வளங்களும் நலன்களும் தந்து நிறைவாழ்வுக்கு வழி காட்டட்டும்

சித்திரைத் தாயே வருக! சீருஞ் சிறப்பும் தருக! தமிழ்ப் புதுவருடங்கள் பிறக்கும் ஒவ்வொரு ஆண்டும் நீயும் பிறந்து வருகின்றாய். பன்னிரண்டு மாதங்கள் ஓடும்; மீண்டும் வந்து பிறப்பாய். உனக்கு அழிவில்லை; நீ பிறந்து கொண்டே இருக்கிறாய். நீ வந்ததும் இளவேனில் மங்கை நல்லாளும் உடன் வருவாள்; இன்பசுகம் தருவாள். இயற்கை அன்னை பச்சை உடுத்து பசுமையும் செழுமையும் தாங்கிக் காயும் கனியும் தந்து வாயும் வயிறும் நிரம்பச் செய்வாள்.

வசந்தகாலம் பிறந்த தென்று மகிழ்ந்து மக்கள் நெகிழ்ந்து இன்பத்தில் திளைத்துக் குதூகலிப்பர். மன்னன் மாரன் மகிழ்துணையாகிய இன் இளவேனில் வந்தனன் என்று காதலர்கள் களிப்பெய்துவர். ஊடினீர் எல்லாம் உருவிலான்தன் ஆணை கூடு மின் என்று குயில்கள் சாற்றும். இக்காதலர்கள் புதுமணம் புரிய விரும்பி உன் வரவை ஆவலுடன் எதிர்பார்ப்பர். திருமணத்திற்குரிய சூழ்நிலையை நீ உருவாக்குவாய்.

பகலவன் ஒளிதருவான். வீடுதோறும் தானியங்களும் பிறபொருள்களும் நிரம்பியிருக்கும். ஓடைகளிலும், நீர் நிலைகளிலும் ஊறுகின்ற நன்னீர் தீஞ்சுவை பயக்கும். மாந்தர் தம் தம் ஐம்பொறிகளாலும் நுகர்தற்குரிய இன்பம் பொங்கும் இனிய திருமணங்கள் இன்பமாக நடைபெறும். வாழ்வு மலரும்.

மக்கள் தொழில் வளமும் பொருள் வளமும் பெறும் நல்ல முயற்சிகளில் ஈடுபடுவர். உறவும், ஊராரும் உற்றார் பெற்றாரும் நண்பர்களும், கண்டும் கேட்டும், உண்டும் உடுத்தும் ஆசிகள் பெற்றும், அகமகிழ்ந்து தேசும் திருப்தியும் பெறுவர். ஆகவேதான் இயற்கையோடு இசைந்து வாழ்ந்த எம்தமிழ் மக்கள் நினது வரவின் முதல் நாளைத் தலைநாளாகக் கொண்டு சிறப்பித்தனர்.

கடந்த பல ஆண்டுகளாக நடைமுறைகளும் விலகிப் போயுள்ளன. புலம் பெயர்ந்தும் இடம் பெயர்ந்தும் வாழும் எம்மக்கள் இவற்றைச் சிக்கெனப் பிடிப்பதற்கான வசதியும் வளமும் உளவள நலனும் அற்றவர்களாகக் கண்டதே காட்சி கொண்டதே கோலமாக வாழ்கின்றார்கள். இதனால் அகவாழ்வில் நாம் கடைப்பிடித்துவந்த ஆன்மீகப் பண்பாடு, புறவாழ்வில் புகுந்து வருகின்ற புரட்டுகளாலும் மிரட்டல்களாலும், அழிந்து போகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

தமிழ் வருடங்களில் பன்னிரண்டாவது ஆண்டாகவும், வெகுதானிய ஆண்டாகவும் நீ பிறந்து வருகின்றாய். வெகுசிறப்போடுநீவர வாழ்த்

**நா. க. சண்முகநாதபிள்ளை**

நீ வந்தாய், எனினும் மகிழ்ச்சியும் குதூகலமும் நிரம்பவில்லை. நிறைவாழ்வு கனிச்சுவை போன்றது. அதனை நித்த நித்தம் பெறாத்திருக்கிறோம். இன்னவிதமெல்லாம் வாழ்ந்தால் நாம் சிறப்படைவோம்; நாடு பொலிவு பெறும்; வையகம்கண்டு பெருமையடையும்; கலையும் பண்பாடும் மொழியும் எழுச்சி பெறும் என்று எண்ணினோம். அது கைகூடுவதாக இல்லை.

குடும்பம் என்ற சமுதாய வாழ்வின் அடிநிலை தகர்க்கப்பட்டுள்ளது. சடங்குகள், விழாக்கள், கொண்டாட்டங்கள், பண்டிகைகள் என்பவற்றைக் கொண்டாடுவதில்நாம் பாரம்பரியமாகக் கடைப்பிடித்துவந்தவிதிமுறைகளும் துக்கூறுகின்றோம். உனது வரவால் தேக சுகமும், நல்ல மழையும், அரசியல் மாற்றமும், மக்களுக்கு முன்னேற்றமும், கலைபண்பாட்டுச் சிறப்பும், பொருளாதார எழுச்சியும், சாந்தியும், சமாதானமும் பெருகும் என்று சோதிடர்கள் உறுதியாகக் கூறுகின்றனர்.

இந்த நலன்களையும், இன்னும் பல வளங்களையும் எமக்கு நீ தரவேண்டுமெனவும்; தாங்கள் சீருஞ்சிறப்பும் பெற யாரும் தடையாக வராமல் வாழ வழிசெய்ய நீ வழி வகுக்க வேண்டுமெனவும் வேண்டுகிறோம்.

★


கண் ஒளி மங்கிய வேளை மின் ஒளியாய்
உங்கள் கண்மணிகள் புத்துயிர் பெற்று
முழுநிலவாய் ஜொலித்திட கண் ஒளியின்
கலங்கரை விளக்கமாய்த் திகழும்

**எரிக்கணேஷ் நிறுவனத்தினரின் புத்தாண்டு வாழ்த்துக்கள்**



" மங்கிடும் பார்வை கொண்ட உங்கள் விழிகள் பொங்கிடும் பார்வை பெற"

"விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம் என அழைப்பவர்கள்"

**எரிக்கணேஷ்**

உங்கள் முகப் பொலிவுக்கு ஏற்றவாறு இறக்குமதி செய்யப்பட்ட அழகிய பிறேம்களில் உங்கள் கண்களுக்குரியசரியான மூக்குக் கண்ணாடிகளைப் பொருத்திப் பெற்றிடவும்.

**எரிக்கணேஷ்**

போட்டோ இறே, போட்டோ பிறவுண், கண்ணாடிகள் சகல பவர்களிலும் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

**அஜந்தாஸ்** — 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**ரெக்ஸ்ரைல்ஸ்** — 25; 4ஆம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

**அஜந்தாஸ்** — 66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## வெகுதானிய! வா!

எண்ணுங் கருத்தும் எழிலாய்ப் பொங்க
நண்ணும் பொருளும் நலமாய்ச் சேர
பண்ணும் பணியும் பலனுஞ் சேர்ந்தே
விண்ணைத் தொடவே வெகுதானிய! வா!

இல்லார் உள்ளார் இல்லை என்றும்
தொல்லை துயரம் தொலைந்தே எங்கும்
எல்லார் வாழ்வும் என்றும் நன்றே
வெல்லச் செய்யும் வெகுதானிய! வா

மண்ணில் என்றும் மனிதம் வளர
உண்மை எம்முள் ஊறிச் செறிய
பண்பும் இன்பும் செழிக்கப் பாரில்
விண்ணைக் காட்ட வெகுதானிய! வா!

— சிற்பி

## நலந்தருவாய் புத்தாண்டே!

அகந்தனிலே அன்பதனை எங்ஙணுமே பெருக்கிமிக
உகந்ததுவாம் தீர்வதனை நாட்டினுக்கு அளித்து
—இந்தச்
சகந்தனிலே போரதனை இல்லாது ஒழித்து
—எவர்க்கும்
சுகந்தனையே தருவாயே மலருகின்ற புத்தாண்டே நீ

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்


சிங்கார உடை அணிந்து சிறப்புடனே நீங்கள் வாழ எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

**ராசி சில்க்ஸ்** — 70, 71 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**நல்லி சில்க்ஸ்** — 121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடத்தை புனிதத்துடனும் இறை நினைப்புடனும் கொண்டாடுக

பண்டைக்காலம் தொட்டு விழாக்கள், விரதங்களைப் போற்றிக் கொண்டாடும் மரபுதமிழ்மக்களிடம்இருந்து வருகிறது. அந்த வகையிலே சூரியனின் சுழற்சியின்படி சூரியன் மேட இராசியிலே சஞ்சரிக்கும் காலத்தை புது வருடமாகக் கணித்து சித்திரைப் புத்தாண்டாக பின் பற்றிச் சிறப்பிக்கிறார்கள்.

சுழன்று கொண்டிருக்கும் காலச் சக்கரத்திலே புதிய ஆண்டிலேயேமீண்டும் காலடி எடுத்துவைக்கும் நாம் இந் நாளை நன்னாளாக்க ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவது இன்றியமையாததாகும்.

ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு உதவும் ஆலயங்களில் புதுவருடம் உதயமாகும் போது விசேடஅபிஷேக, ஆராதனைகள் நடைபெறும். இவ் வேளையிலே எமது கடந்த கால வாழ்வின் பிழைகள், குறைகளை இறைவனிடம் மன்னிக்குமாறு (வேண்டி கண்ணீர் மல்கி மன்றாடும் போது புதுமனிதனாக, நல்லவனாக, தூய எண்ணமுடையவனாக மாறிவிட மிக அதிக வாய்ப்பு உண்டாகிறது.

பிழை விடுவது மனித இயல்பு. அந்தப் பிழைகளைத் திருத்திக் கொள்ள இறைவன் எமக்குத் தந்தசந்தர்ப்பங்களில் ஆலய வழிபாடும் ஒன்றாகும். நாம் எம்மைத் திருத்திக்கொள்ள வழிசமைப்பது எமது கையிலேயே உள்ளது.

சித்திரைப் புதுவருட தினத்தை சைவர்கள் பக்தி பூர்வமாக அகமும், புறமும் தூயதாக கொண்டாடுவார்கள். தமது இல்லத்தையும், சூழலையும் தூயதாக்கி, விருந்தினர்களை எதிர்பார்த்து, இனிய பண்டங்கள் தயாரித்து மகிழ்வார்கள். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று, உபசரித்து, குலவும்போது நம்மிடையே வளர்த்து வந்த வேற்றுமைகளை மறந்து ஒன்றுகூடிக் குதூகலிக்கின்றோம்.

காலத்தின் சிறப்பை உணராத சிலர் தற்காலத்திலே தெய்வீக சிந்தனையுடன் கழிக்க வேண்டிய இத் தினத்தை தீய செயல்களிலே செலவிட்டு பழிவாங்களைத் தேடிக் கொள்கிறார்கள்.

முன்னோர்கள் பாரம்பரியமாக தெய்வசிந்தனையுடன்

## இளவல்

கொண்டாடிய நாளை இன்று நாம் '' நியூ இயர்பார்ட்டி'' என்ற பெயருடன் மது போதை, சினிமா, பொப் பாடல்களுடன் கழிக்கின்றோம்.

இதன் தாக்கங்கள் எமக்கு வாழ்வின் இறுதிக் கட்டத்திலே தெரியும் போது ''கண் கெட்ட பின் சூரியநமஸ்காரம்'' என்ற நிலைமைதான் எமக்கு ஏற்பட்டிருக்கும்.

எனவே பிறவிப் பெருங் கடலை நீந்தி பேரின்பம் பெறுவதற்கு இச் சித்திரைப் புத்தாண்டு தினத்தை வேற்றுமை மறந்து இறை நினைப்புடன் கொண்டாடுவோமாக. இறைவன் ஒவ்வொருவரிடமும் ஒளிந்து உறைந்திருக்கிறான். ஏழைகள், அங்கவீனர்கள், வசதி குறைந்தவர்களிடமும் அவன் உள்ளே உள்ளான். அவர்களுக்கு உதவும் மன இரக்கம் எம்மிடம் ஊற்றெடுக்கட்டும்.

விழாக்கள் கொண்டாட்டங்கள் எம்மை நல்வழியில் இட்டுச் செல்வதற்காக வகுக்கப் பட்டவையே.

ஆகையால் புதுவருடத்தை புனிதமாக, தூயமனதுடன், பிறருக்கு உதவும் இரக்கத்துடன் கொண்டாடுவோமாக.

★


# பெட்டாவின் புத்தாண்டு வாழ்த்துக்கள்

**யாழ். நகரில்:**
தரம்மிக்க பேப்பர் வகைகளையும், எசன்ஸ் வகைகளையும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

**பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் & பேப்பர் மேர்ச்சன்ட்**

★ றோணியோ பேப்பர் ★ ரைப்பிங்சீற் ★ போஸ்டர் பேப்பர்
★ நியூஸ் பிறின்ட் ★ பாங்பேப்பர் ★ ரிசுப்பேப்பர்
மற்றும்
★ பொக்ஸ் போர்ட் ★ சிப்போட் ★ பிறிஸ்டல் போர்ட்
ஆகிய சகல விதமான பேப்பர் வகைகளுக்கும், அச்சகத்துக்குத் தேவையான
★ மைவகைகளையும் ★ ரோணியோ மை வகைகளையும்
வேண்டிய அளவிலும்

○ ஐஸ்கிறீம் ○ குளிர்பானம் ○ கேக் வகை ○ பிஸ்கற்
○ இனிப்பு ○ பீடா
ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகல மூலப் பொருள்களையும்
★ ஊதுபத்தி ★ சாம்பிராணி வாசனைத்திரவியங்கள்
★ ஆயுர்வேத மருந்து வகைகள்
தயாரிக்கும் மூலிகை வகைகள்
★ குங்குமம் ★ குங்குமப்பூ ★ எண்ணெய் ★ நெய்
மற்றும்
★ சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள்
○ பிஸ்கட் ○ சொக்கிலேட் ○ ரொபி
வகைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம் தான்

**பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ்**
104 (298), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## பழையபடி மலரட்டும்

புத்தம்புதிய உடை அணிந்து
புதுப் பொலிவுடன் மனம்
மகிழ்ந்து
பாசத்திற்கினிய உறவு
களுடன்
பிணைந்திருந்தோம் அக்
காலம்.

உறவுகள் பிரிந்தெங்கும்
ஊருராய் அலையும் வேளை-
பாசப் பறவைகள் - நாம்
பரிதவித்து நிற்கின்றோம்
இங்கே.

கஞ்சிக்கும் வழியில்லை
காசதுவோ கையிலில்லை
கடவுள் அவன்கண்களில்கூட
கருணை தனைக் காணோம்
இன்று.

என்ன செய்ய இந்நிலையை
ஏக்கத்தைத் தான் யாரிடம்
சொல்ல
உள்ளங்கள் படும் தவிப்பை
உரைத்திடவும் வார்த்தை
யுண்டோ?

பூமிக்கும் பொறுமை
யுண்டாம்
பொறுமைக்கும்
எல்லையுண்டாம்
எல்லையற்ற எம் பொறுமை
என்று தான் தீர்ந்திடுமோ?
புத்தாண்டு வரும் நாளைப்
புதுமையோடு
எதிர்பார்ப்போம்
வந்து செல்லும் புத்தாண்டும்
வாழவழி தராமல் செல்லும்.
தொண்ணூற்றெட்டும் (98)
பிறந்ததுவும்
தொழிலாளர் நாம்
கழிப்புற்றோம்.

சித்திரை மகள் பிறந்ததுவும்
சிற்பிகள் நாம் சிரித்து
நின்றோம்.

எம் நிலைமை என்று மாறும்?
ஏக்கமது என்று தீரும்?
இனிய நல் புத்தாண்டே
புது வழி தனைக் காட்டி
டாயா?

வழிகள் பல பிறக்கவேண்டும்
பகைமை அதுநீங்கவேண்டும்
பாசமும் நேசமும்
பழையபடி மலரவேண்டும்.

— *சசீலா*

## வருடப்பிறப்பு பூசை வழிபாடுகள்

கொழும்புத்துறை, ஏப். 14

வெகுதானிய புது வருடப் பிறப்பை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை யாழ். குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் விசேட அபிஷேகம், பூசை, வழிபாடு, ஆராதனைகள், பொங்கல் ஆகியன இடம் பெறும்.

ஆலயங்களில் சுவாமி வீதி வலம், வீதி உலா, பஜனை, கூட்டுப் பிரார்த்தனை ஆகியவையும் இடம்பெறும்.

(இ-30)

## வருடாந்த விழா

கொழும்புத்துறை, ஏப். 14

கொழும்புத்துறைசனசமூக நிலையத்தின் 47 ஆவது வருடாந்த விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நிலைய அரங்கில் ஆரம்பமாகிறது.

வருடப்பிறப்பு பொதுக் கூட்டமும், பரிசளிப்பு விழாவும் நிலையத்தலைவர் செ. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலயம் - 1 பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ். அருளானந்தம் கலந்து கொள்வார்.

(இ-30)


**அனைவருக்கும் கல்யாணியின் தித்திக்கும் புதுவருட வாழ்த்துக்கள்**

தித்திக்கும் ஐஸ்கிறீம் குளிர்பான வகைகள், அறுசுவையான
சிற்றுண்டி வகைகளுக்கும் அன்றும் இன்றும் என்றும்
யாழ். நகரில் பெயர் பெற்றவர்கள்:

**கல்யாணி கிறீம் கவுஸ்**

73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள்
அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்



**பி. ஜே. பர்னான்டோ**

**மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டும் நிலையமும்**

முக அமைப்பிற்கு ஏற்றவாறும், வைத்திய ஆலோசனைக்கு அமைவாகவும்
மூக்குக் கண்ணாடிகளைத் தெரிவு செய்வதற்கும்,
சிறந்த முறையில் பற்களைக் கட்டுவதற்கும்
நீண்டகால அனுபவமுடையவர்கள்

இல. 542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமால் அருளை முன்வைத்தே

# வருடப் பிறப்புக் கொண்டாட்டம்

சைவ மக்களாகிய எமக்கு சித்திரை மாதமே வருடத்தின்முதல் மாதம். மண்ணுலக மக்களை உயிர் வாழ வைப்பவர் சூரிய பகவான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களுக்கும் ஆதிகாரணர் சூரியனே. ஆகையினால் தான் நாம் அவரைச் ''சிவ சூரிய மூர்த்தி'' என்று வழிபட்டு வருகின்றோம். சிவபெருமான் இவரை மையமாக வைத்தே அருளாட்சி புரிகின்றார்.

வருடத்தின் முதல் மாதமாகிய சித்திரை முதலாம் நாள் சூரியன் மேட இராசியாகிய கிழக்குத் திசையிலே தோன்றுவான். அந்நாள் சங்கிராந்தியை விஷு புண்ணிய காலம் என்பர்.

இப்புண்ணியகாலத்தையே மிகப் புனிதமாய் புத்தாண்டு என்றும் புது வருடப் பிறப்பு என்றும் கொண்டாடுகின்றோம். சித்திரை பிறந்துவிட்டால் அனைவருடைய உள்ளத்திலும் புத்துணர்ச்சி வந்துவிடும். இந்த நல்ல நாளை நாம் அனைவரும் சந்தோஷமாக வரவேற்று புத்தாடை அணிந்து சிவாலய தரிசனஞ் செய்து வெகு சிறப்பாகஆரம்பிக்கின்றோம்.

வயதுக்கு மூத்த பெரியவர்களிடம் கைவிசேஷம் வாங்கி வாழ்வில் லட்சுமீகரம் சிறக்க வேண்டும் என்று இறைவனை வழுத்துகின்றோம்.

சிலர் புனிதமான இந்நன்ளாளை ஆடு, மாடு, கோழி முதலானவற்றைக் கொன்று தின்று மகிழ்கின்றனர். இது முற்றிலும் தவறானசெய்கை. குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசலாமோ? இப்புண்ணிய நன்னாளில் புனித நீராடி ஆலய தரிசனஞ் செய்வதுடன் தாய், தந்தையர், குரு, பெரியோர்முதலானவர்களை வணங்கி ஆசிகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

உறவினர், நண்பர்களுடன் அளவளாவி நல்ல விடயங்களைப் பேசி, நல்லதைச் சிந்தித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ சங்கற்பம் எடுத்துக் கொள்ள வேண்டும். முடிந்தால் இயன்றளவு தானதருமங்கள் செய்து பசிக்குணவளித்து ஏழைகளை ஆதரித்தல் நல்லது.

**இராசையா ஸ்ரீதரன்**

வருடாவருடம் ஒவ்வொரு பெயருடன் புதுவருடம் பிறக்கின்றது. இதற்கு ஒரு கதை உண்டு.

விஷ்ணு மூர்த்தியானவர் கண்ணபிரானாகத்துவாரகையில் அவதரித்து இருக்கும் நாளில்பதினாறாயிரம்கோபிகாஸ்திரீகள் அவருக்கு இருந்தார்கள். அவர்களுக்குத் தனித்தனி வீடு கட்டிக் கொடுத்திருந்தார். அவர்கள் மிகுந்த அழகுள்ளவர்கள். இந்த கோபிகாஸ்திரீகளில் ஒருவரை நாரதர் மணஞ் செய்து கொள்ள எண்ணினார். அவ்வாறு தன் விருப்பத்தை நாரதர் வெளியிட்டுக் கேட்டபோது அவர்களில் ஒவ்வொருவரும், ''கண்ணன் சம்மதித்தால் எங்களில் யாராவது ஒருவர் உம்மை மணஞ்செய்து கொள்வோம்'' என்றார்கள். உடனே நாரதர்பகவானைஅடைந்து, தமது விருப்பத்தையும், அதற்கு அவர்கள் சொல்லிய முடிவையும் வெளியிட்டார். அதைக் கேட்ட கண்ணபிரான் ''நாரதரே! நன்று சொன்னீர். நான் இல்லாத வீட்டில் உள்ள ஒருத்தியை நீர்போய்ப்பெற்றுக்கொண்டு மணஞ் செய்யலாம்'' என்று கூறினார். நாரதரும் சரி

(IV ஆம் பக்கம் பார்க்க


வர்த்தக வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஜெயா அழகு மாடம்

மொத்த வியாபாரம்,
127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

160, தொலைபேசி சேவை,
149, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்
கண்டவுடன் அகமகிழ்ந்து
கொண்டவுடன் அணிந்து மகிழ
அனைத்து ரக புடைவை வகைத் தெரிவுக்கும்

கோபிகா ஆடையகம்

இல. 4 நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வர்த்தகர்கள்
அனைவருக்கும் தமது புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
மிக்க மகிழ்ச்சியடைகின்றார்கள்

நந்தினி நகைமாட ஸ்தாபனத்தார்.

உலகம் வியக்கும் உன்னத நகைத் தெரிவுக்கு

நந்தினி நகைமாடம்

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
218 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

புலரும் பொழுது பூத்துக் குலுங்க
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
ஜவுளி உலகின் முன்னோடிகள்

ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ

13, 14, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த

சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு

நியூ சோபிதா நகை மாடம்

நவீன டிசைன்களில் நங்கையின் அழகுக்கு அழகு
தரும் கண்கவர் தங்க நகைகளை குறித்த தவணை
யில் தர உறுதியுடன் வடிவமைத்துப் பெற்றிட
யாழ். நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ சோபிதா நகை மாடம்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

"முத்தான வாழ்வு இனிதே பிறந்திட
எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்"
அசல் 22 கரட் தங்க நகைகள் மற்றும்
றெடிமேற் நகைகளுக்கும்:

ஓம் முருகன் நகை மாடம்

கைதடிச் சந்தி, கைதடி.

தமிழ்
புதுவருட வாழ்த்துக்கள்
பிறிமியர் ஓட்டோ மோட்டிவ்ஸ்
ஸ்தாபனத்தார்

தமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
ஆகியோர்களுக்கு தமது இனிய புத்தாண்டு
வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

SUZUKI (BRAND NEW)
T. V. S. SCOOTY MOTOR CYCLE
SELF STARTER, MODEL–60CC
முக்கியமாக வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு
உகந்தது.

YAMAHA ஜெனரேட்டர்ஸ்
[ஜப்பான்]
எங்களிடம் விற்பனைக்குண்டு.

பிறிமியர் ஓட்டோ மோட்டிவ்ஸ்

338, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது உள்ளங் கனிந்த
இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், ஜெனரேற்றர் வகைகள்
சோலர் வகைகள், சகலவிதமான பற்றறி வகைகள், தரமான அசிட் வகைகள் என்பனவற்றுக்கு நாடவேண்டிய இடம்:

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்,
ARUL VINAYAKAR MOTORS,
இல. 103, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: அருள் விநாயகர் மோட்டோர்ஸ்,
இல. 262, கண்டி வீதி, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்பொலிவு நிறைந்த
**புதுவருட வாழ்த்துக்கள்!**
புடைவைத் தினுசுகளின் சங்கமம்
## சீமாட்டி
**புடைவைக் கடல்,**
122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
**புதுவருட வாழ்த்துக்கள்!**
## சிவாஸ்
மணிக்கூட்டுத் தொழிலகம்,
568B, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## நாயன்மார்கட்டு வைத்தியசாலை
நல்லூர், யாழ். நகரம்.
மேற்படி எமது வைத்தியசாலையில்
முறிவு, நெரிவு மற்றும்
சகல ரோகங்களுக்கும்
குறிப்பாக
பெண்கள் சம்பந்தமான வியாதிகள்
மலட்டு ரோகம்
ஆண்மைக் குறைவு
குழந்தை வைத்தியம்
என்பனவற்றுக்கு சிறப்பாகச் சிகிச்சை
அளிக்கப்படும்.
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!
வைத்திய கலாநிதி
ஏ. உமாகாந்தன்.
(54819)

## திருமால்...

(III ஆம் பக்கத் தொடர்)

என்று கொல்லி விட்டு பதினாறாயிரம் கோபிகாஸ்திரீகள் ஒவ்வொருவரது வீட்டிலும் போய்ப் பார்த்தார். அங்கெல்லாம் பரந்தாமன் இருப்பதைக் கண்டு, வெட்கப்பட்டார். அதனால் அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டார்.

இருந்தும் ஆசை யாரை விட்டது. நாரதர் பரந்தாமனைப் பார்த்து, ''சுவாமி! தேவரீருடைய அழகு என்னைக் கொள்ளை கொண்டு விட்டது. நான் தங்களைப் பெண் வடிவங்கொண்டு கூட, மோகமாய் இருக்கின்றதே'' என்றார். அதற்குப் பரந்தாமன் சிரித்துக் கொண்டே, ''நீ யமுனா நதியில் நீராடி வா'' என்றார்.

நாரதர் நீராடிய பொழுது பெண் வடிவமாய் மாறிவிட்டார். அந்த வேளையே பகவானைச் சேர்ந்து இன்பம் அனுபவித்தார். அதன் பயனாய் வருடம் ஒரு பிள்ளையாக அறுபது பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். அவரது ஆசையும் பூர்த்தியாகியது. பழையபடி மீண்டும் யமுனா நதியில் நீராட, நாரதர் தமது சொந்த வடிவைப் பெற்றார்.

ஒவ்வொருவருடமும்பிறந்த பிள்ளைகளே பிரசவ முதல் அறுபது வருடங்களின் பெயருமாம். ஆகவே, வருடப்பிறப்புக் கொண்டாடுவதற்கு காத்தற் கடவுளாகிய திருமாலே காரணகர்த்தாவாகத் திகழ்கின்றார்.

திருமாலாளவர் துஷ்ட நிக்ரெசிஷ்ட பரிபாலன மூர்த்தியாக தசாவதாரங்களிலும் திகழ்கின்றார் ''ஆதிமூலமே'' என்று அரற்றிய யானைக்கும் கண்ணா! நீயே கதி' என்று அலறிய திரெளபதிக்கும் அருள் செய்த கமலக் கண்ணன் இப் புத்தாண்டுத் தினத்தில் நமக்கும் திருவருள் புரிவார்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தித்துதித்து அவனருளாலே அவன்தாள் வணங்கி புத்தாண்டு முதல் புதுவாழ்வு வாழ்வதற்கு அவனது திருவருட் கடாட்சத்தையே வேண்டி ஆன்ம ஈடேற்றம் பெறுவோமாக.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் இதயங் கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
## ராணி பேக்கரி
முதலாம் கட்டைச் சந்தி,
பருத்தித்துறை.
## பிரியா திரையரங்கு
மருதடி,
பருத்தித்துறை.

**தமிழ்**
**புதுவருட வாழ்த்துக்கள்**
குருடீசல் என்ஜினியேர்ஸ்ஸ்தாபனத்தார்
தமது வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.
உங்கள் டீசல் வாகன இன்ஜெக்டர் பம்,
நொசல் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கும்
உதிரிப்பாகங்களை வாங்குவதற்கும்
சிறந்த ஸ்தாபனம்
## குருடீசல் என்ஜினியேர்ஸ்
இல 338, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

புதுவருட வாழ்த்துக்களுடன்
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின்
நாட்டுக்கூத்து இசைநாடகப் போட்டி
நிதிக்காக
செல்லையா மெற்றாஸ் மயிலின்
நெறியாள்கையிலும், நடிப்பிலும் உருவான
அரியான் பொய்கையின்
## வேழம்படுத்த வீராங்கனை
ஆட்ட நாட்டுக்கூத்து
(தமிழ் வீரப்பெண்ணின் வீரக்கதை)
இடம்: இளங்கலைஞர் மன்றம், நல்லூர்.
காலம்: **19 - 04 - 98** ஞாயிறு மு. ப. 10. 00 மணி
பி. ப. 3. 00 மணி (பழைய நேரம்)
டிக்கட் பெறுமிடம்:-
**மெடிஎயிட்ஸ் மருந்தகம்**
644, பருத்தித்துறைவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்
அன்பளிப்பு:-
**ஸ்ரீ காந்தா அன் கோ**
12, அரச வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(54835)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
## யாழ். கொமினிகேசன் சென்ரர்
**442, ஆஸ்பத்திரி றோட்,**
**யாழ்ப்பாணம்.**
எங்கள் ஸ்தாபனத்தில் புதுவருடத்தை முன்னிட்டு
மக்கள் நலன் கருதி சலுகைகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| உள்ளூர்த் தொலைபேசித் தொடர்புகளுக்கு ஒவ்வொரு நிமிடம் | 10/- |
| வெளியூர் தொலைபேசித் தொடர்களுக்கு ஒவ்வொரு நிமிடம் | 140/- |
| ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியூர் தொடர்புகள் ஒவ்வொரு நிமிடம் | 100-/ |
| அங்கிருந்து வரும் தொலைபேசித் தொடர்புகள் ஒவ்வொரு நிமிடம் | 5-/ |

இத்துடன் FAX சேவைகளும் போட்டோ பிரதிகள் கவரிடுதல்
ஆகியன செய்து கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
★ **YARL COMMUNICATION CENTRE** ★
எமது தொலைபேசி இலக்கங்கள் **2016, 2502, 2192.**

வாடிக்கையாளர், விற்பனையாளர்
அனைவருக்கும்
Tasty PRODUCTS
## ரேஸ்ரியின்
அன்பு கலந்த வெகுதானிய
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**
ரேஸ்ரி நெல்லிரசம் ★ ஜாம் வகைகள்
★ கோடியல் வகைகள் ★ சோஸ்வகைகள் ★ ஊறுகாய்
முதலியன குடாநாட்டில் எங்கும் கிடைக்கும்.
ரேஸ்ரி–தரத்தின் சின்னம், சுவையின் சிகரம்
உங்களிடமுள்ள வெற்றுப் போத்தல்களை எம்மிடம் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
**TASTE LINE INDUSTRIES (PVT.) LTD.**
ADIYAPATHAM ROAD, THIRUNELVELLY.
(54847)

**மலரும் புத்தாண்டில் மகிழ்ச்சியான வாழ்வு அமைய**
**எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
அத்தியாவசியப் பொருள்கள் ஆடவர் – நங்கையர்களுக்கான சகலவித உள்ளாடைகள்
Curvform & Carina Brassieres Silvershield Socks & Elastic
10% முதல் 50% வரை விலைக்கழிவு! இன்னும் பலவகைகளைப் பெற்றுக்கொள்ள:
## லிங்கன் ஸ்ரோர்ஸ்
168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்
# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர்

## மாதா, பிதா, குருவை வணங்கி இறைவனிடம் ஆசி பெறுங்கள்

எம் இனிய இந்து மதம் இவ்வையகத்துக்கு தந்தவை ஏராளம். இந்துமதம் ஏற்படுத்திய விழாக்கள் ஒவ்வொன்றும் வாழ்வுக்கு உகந்த வாழ்வியற் கருததுக்கள் மிக்கவையாகும். இந்துமதத்திலிருந்து சில புதியகருத்துக்களைச் சொல்ல எழுந்த கொள்கையே பௌத்த மதமாகியது. இந்து மதத்தின் பாரம்பரிய விழாக்களில் ஒன்று புத்தாண்டு. காலத்தை கலண்டர்கள் கணிக்க முன்பே கடவுளையும் கடவுகத்தைப் பற்றிச் சொல்ல ளைச் சூழ்ந்த இயற்கையையும் வைத்து காலத்தைக் கணித்தவர்கள் இந்துக்கள். விஞ்ஞானிகள் தோன்றி கிர முன்பே இந்துமதமெய்ஞ்ஞானிகள் தோன்றி நாள் கோள் நட்சத்திரங்களைப் பற்றியும் அவற்றின்இயல்புகளைப் பற்றியும் இயம்பினர்.

இயற்கை முதல் இனிய வாழ்க்கை வரை இயம்பிய இந்து மதம் காலத்தின் சுழற்சிக்கு எல்லைவைத்து அவ்வெல்லைகளுக்கு நாமம் ணைத்த தந்தை எனும் தெய்வத்தை நினைந்து வணங்குங்கள். எம் வாழ்வுக்காக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப்பாடுபட்டு உழைத்து எம்மைப் படிக்க வைத்த தந்தை செய்த கடமைகளை — செய்துவரும் கடமைகளை — நினைத்து வணங்குங்கள். எங்கள் ஒவ்

செல்ல திசை காட்டிய கலங்கரை விளக்குகள் எம் குருவானவர்கள் இவர்களை வணங்கி வாழ்த்துப் பெறுவதே புத்தாண்டுக் கடமையின் முதன்மையான கடமைகள்.

மாதாவை, பிதாவை குருவை வழிபட்டு அவர்களிடம் பெற்ற நன்றிகளை நினைந்துருகி வழிபட்ட நாம் நிறைவாக எம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றிசொல்லிவணங்க வேண்டும்.

இறைவா எனக்கு எத்தனை நல்லருளை தந்தாய். வேளை தோறும் உண்ண வைத்தாய். நல்ல தாயை, தந்தையை, குருவை இனிய

## புத்தாண்டுவிழாவை அர்த்தமுள்ளதாக்க நீங்கள் செய்ய வேண்டியவை இவையே

வைத்து, புதிய புதிய ஆண்டாக அந்த எல்லையை மனிதன் நினைத்து வாழ்வை வளப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது.

புதிய ஆண்டு பிறக்கும் போது ஒவ்வொரு இந்துவும் நன்றிக்குரிய பல விழாவாகக் கருதிப் பெரியவர்களின் ஆசிகளை வேண்டுவதும், உறவுகளைப் புதுப்பிப்பதும் மிக முக்கிய கடமையாகக் கருத வேண்டும் என்பது இந்து மரபாகும். ஒவ்வொரு மனிதனின் நல்வாழ்வுக்குரிய இனிய தெய்வங்களாக கருதப்படுகின்றவர்களை இப் புத்தாண்டில் நினைவு கொண்டு வணங்கி ஆசி பெறல் வேண்டும். தாய், தந்தை, ஆசிரியர், ஆண்டவன் என்பது இந்து மதம்

### ஆறு. திருமுருகன்

வகுத்த வழிபாட்டு ஒழுங்காகும்.

இனிய இந்துக்களே! புத்தாண்டு நாளில் நீவீர் புனிதமாக வணங்கி நன்றி செலுத்த வேண்டியவர்களை நினைத்துப் பாருங்கள். பத்துமாதம் சுமந்து பெற்றவளை நினைத்துப் பாருங்கள். கருவறையில் சுமக்கும் போதே எம்மை நினைத்து எத்தனை கற்பனைகளையும் சேர்த்துச் சுமப்பவள் எம் அன்னை. அவள் எம்மை வளர்த்து எடுத்த வாழ்வை நினைத்து வணங்குங்கள். தொட்டில் கட்டித்தாலாட்டி தோள் மீது சுமந்து எத்தனை ஆடைகட்டி அழகுபார்த்து அமுதூட்டிய தாயை இந்நாளில் நினைத்து வணங்குங்கள். இதுதான் இந்துக்களின் முதற் கடன்.

அன்னைக்கு அடுத்த தெய்வமாய் எம்மை அரவ

வொருவரையும் அவையத்தில் முந்தி இருப்பச் செய்வதற்காக தந்தை செய்த தியாகங்களை நினைத்து இந்நாளில் வணங்குங்கள்.

அறிவுச் சுடர் ஏற்றி எம் அறியாமையை நீக்கிய ஆசிரியப்பெருந்தகைகளை இந்நாளில் இனிதே வணங்குங்கள். எம் துடுக்கை அடக்கி பாதக வழியில் செல்லாது பயன் பெறு வழியில்

உறவுகளைத் தந்த உனக்கு யான் என்றும் நன்றிக் கடன் பட்டவன் என இந்நாளில் வேண்டுதல் செய்தல் வேண்டும். இதுவே இந்து மதம் கூறும் புத்தாண்டுத்தின வழிபாட்டு நெறிமுறையாகும்.

இவற்றைப் பேணும் மனிதனே உண்மை இந்து மதத்தவனாவான். எனவே புத்தாண்டு பிறக்கும் வேளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தெய்வத் திருவருள் காக்குக!

மங்கலமாகப் பிறக்கும் வெகுதானிய வருடப் பிறப்பை வணங்கி வரவேற்றுக் கொள்ளுங்கள். கடவுளையும், மனிதனையும், மனிதனையும், மனிதனையும் இணைப்பதற்கு எங்கள் சமயம் பல விழாக்களை ஏற்படுத்தியது.

அவ்வகையில் புத்தாண்டு விழா சிறப்பு வாய்ந்த தனித்துவமான விழாவாகும். இத்திருநாளில் இவ்வையகத்தின் நன்மைக்காகவும், ஒவ்வொரு ஆத்மாவின் நன்மைக்காகவும் ஆலய வழிபாடு செய்து வணங்குதல் ஒவ்வொருவரதும் பிரதான கடமையாகும்.

எங்கள் திருநாட்டில் நன்மை நடைபெற வேண்டும், தீயவை எம்மை தீண்டாது தெய்வத் திருவருள் காக்க வேண்டும் என வழிபாடு செய்யுங்கள். அன்பு வழியில் ஆண்டவனையும், ஆத்மாக்களையும் உரித்தாக்கிக் கொள்ளுங்கள்.

வெளிச்சம் வரும் போது இருள் மறைகிறது. அன்பு ஓங்கும் பொழுது அச்சம் அகன்று விடுகிறது.''

''அன்பு வழியில் நின்று அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தினையும், ஆசிகளையும் கூறி அமைகிறேன். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
முதல்வர்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.

## அறநெறி வாழ்வு வாழ திடசங்கற்பம் கொள்க!

தமிழர் வாழ்வில் தனித்துவம் மிக்க பெருநாள் புத்தாண்டு. இறைவழிபாட்டுக்கும் இனிய ஆசிகளுக்கும் உரித்தான இந்நாளை உரிய முறையில் அனைவரும் பயன் படுத்தி ஓய்வு பெற வேண்டும். மருத்து நீராடி உடலும் உள்ளமும் புனிதம் பெற்று நல்ல சிந்தனைகளோடு இப் புண்ணிய நாளைப் போற்றுங்கள். உங்கள் மனங்களில் வரும் அழுக்கான எண்ணங்களை உதறி அறநெறி வாழ்வு வாழ திடசங்கற்பம் கொள்ளுங்கள்.

அழுகிப் போன பழம் ஒன்று கூடையில் உள்ள நல்ல பழங்களையும் கெடுத்து விடுவது போல நல்ல எண்ணங்கள், செயற்பாடுகள் உள்ள மனிதர்களை சில தீய எண்ணங்கள் அசிங்கமாக்கி விடும் என்பது மூத்தோரின் அமுத வாக்கு.

சிந்தை, சொல், செயல் ஆகிய மூன்றும் ஒரே நிலையுடையவர்களாக வாழ இந்நாளில் திடங் கொள்ளுங்கள். இறைவழிபாடும் ஏழைகளுக்கு உதவும் பணியையும் ஒவ்வொருவரும் செய்ய முனையுங்கள். நல்ல காரியங்களை இவ்வாண்டில் ஆற்றவேண்டும் என ஒவ்வொருவரும் சிந்தியுங்கள்.

''நாளைக்குச் செய்வது என்பதை இன்றே செய்; இன்றே செய்வது என்பதை இப்பொழுதே செய். என்ற மகான்களின் அருமருந்தான வார்தைதகளை அகத்தில் தாங்கி நல்லன செய்ய முற்படுங்கள்.

எமது நாடு அமைதியும் ஆனந்தமும் நிரந்தர நிம்மதியும் பெற அம்பாளை பிரார்த்தனை செய்து அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவத்த தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.


சானுகாவின் புத்தாண்டு வாழ்த்துக்கள்

மங்கள கரமாக மலரும் சூரியனின் புத்தொளியில்
உள்ளங்களில் உவகையும் இல்லங்களில்
இனிமையும் பெறுக.
இனிய புத்தாண்டே வருக.

உங்கள் அழகின் எண்ணம்
சானுகாவின்
நகைகளின் வண்ணம்

சானுகா ஜீவல்லர்ஸ்
SHANUGA JEWELLERS
198H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 198H, KASTHURIYAR ROAD, JAFFNA.
(சி/ 3446)



அன்புக்கினிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், மாணவர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
சிற்றியின் இதயம் கனிந்த புலரும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.
நாளைய நாகரிகத்தினை இன்றே அறிமுகம் செய்து எடுப்புற தைப்பவர்கள்

CITY TAILORS [ Specialist in Wedding Coat & Suits ]

நவீனடிசைன், தரம், விலைகுறைவு, அன்றும் இன்றும் என்றும்

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

( புடைவை தினுசுகளின் ராஜ முத்திரை ரெடிமேட் தினுசுகளின் சங்கமம் )

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர்


## அமைதி சூழ...

''அன்பு சமாதானம், அமைதியுங் கொண்டுவா
புத்தாண்டே,'' எனவேண்டும் மானிடனே,
என்னிடம் ஏன் கேட்டாய்? என்னாலா அமைதிவரும்?
இல்லை யில்லை. எண்ணிப்பார் மானிடனே,
உன்னிடமே வழியுண்டு! உள்ளத்தில் அன்பை விதை!
ஒவ்வோர் உள்ளத்திற்கும் அதைப் பரப்பு!
வன்முறைகள் தீர்ந்துவிடும், அமைதி சூழ
வளத்தோடு வாழ்வாய் நீ! தொடங்கின்றே!

-யோகேஸ்வரி சிவப்பிரகாசம்.

## நம்பியே நிற்கிறோம்!

மாறாத காயங்களும்
ஆறாத மனங்களுமாய்
இங்கு நொந்த மனிதர்கள்:
வந்து நிற்கின்ற
சித்திரை நங்கை நீ,
இத் தரையினர்க்கு,
ஏது சொல்லப் போகின்றாய்?
சூது வாது எதற்குமே,
செல்லாத இந்த மனிதர்களின்,
அல்லல்கள் கொஞ்சமல்ல.
உன் பாதங்கள் தொட்டு,
வருடா வருடம்,
உருகி நிற்கின்றோம்...
கலக்கங்கள் தீரவில்லை.
மனைகளோடு மக்களும்,
ஊண் உறக்கமின்றி,
மாயும் நிலையும் ஒழியவில்லை.
இன்றுமே.....
வடிவத்தை மாற்றி
வெகுதானிய...நாமம்,
சூடிக் கொண்டே,
வந்து நிற்கும்...அம்மா,
பாற் குடங்களால்—உன்னை
நீராட்டி விட்டே,
பாமாலைகளும் பூமாலைகளுமாய்,
இட்டு வணங்குகின்றோம்.
நமக்கு நலங்களைத்
தருவாயென்று
நம்பியே நிற்கின்றோம்.

-மீசாலையூர் கமலா


மலரும் புத்தாண்டு மங்களமே மலர எமது வாழ்த்துக்கள்

திருமணமா? மங்கள நிகழ்ச்சியா
எழில்மிகு பட்டுப் புடைவைகள் கண்கவர் ஜவுளி ரகங்கள்
அனைத்திற்கும் தரமான நம்பிக்கையான ஸ்தாபனம்

**ராகம்ஸ் பட்டுச் சோலை**

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

இனிய வாடிக்கையாளர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இதயம்கனிந்த
தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
''நதிகளின் சங்கமம் கடலிலே!
சகல விதமான புடைவைகளின் சங்கமம் மகாநதியிலே''

**மகாநதி**

(பட்டு புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்)

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

மலரும் புத்தாண்டில் பொன்னான வாழ்க்கை, புதுமணம் கமழ்ந்திட எம் வாழ்த்துக்கள்

**சாரங்கா நகைமாடம்**

177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அருள்முருகன் நகையகம்**
96/1கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தலைமையகம்)

(இணையகம்)
**சிவா நகைமாடம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.
(கிளையகம்)

புதுவருடத்தில் புத்துணர்ச்சியான வாழ்வு பிறக்க எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்;

**ஐஸ்கிறீம் வகைகளின் சங்கமம்**

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இன்றைய புத்தாண்டு நன்னாளில் தேரேறிவரும்
மானிப்பாய் மருதடி விநாயகரின் ஆசி அனைவருக்கும் கிடைப்பதாக

**குலம் கிறீம் ஹவுஸ்**

266, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org